# நம் வழி வேளாண்மை

பருவம் 31 | அக்டோபர் – டிசம்பர் 2021 | இதழ் 3




மதுரை மேலக்காலில் 19–9–2021 அன்று நடைபெற்ற அடிமட்ட கண்டுபிடிப்பாளர்களின் கருத்தரங்கு

## *இயற்கை வழி விவசாயிகள், மூலிகை வைத்தியர்கள் மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் குரலோசை*

# நம் வழி வேளாண்மை

பருவம் 31 அக்டோபர் – டிசம்பர் 2021 இதழ் 3

ஆசிரியர்

**பெ. விவேகானந்தன்**


### நம் வழி வேளாண்மை தத்துவம்

தேனீக்கள் மலரை நாடிச் செல்கின்றன. மலருக்கு மலர் தாவி தேனை எடுக்கின்றன. தேனை எடுப்பதால் மலர் குறைபடுவதில்லை. மாறாக மலர் கருவுற்று காயாக, கனியாக துணை செய்கின்றன. தேனீக்களின் இந்த சேவையினால் மலரும் பயன் பெறுகின்றது. தனக்கும் பிறருக்கும் பயன்படும் தேனையும் சேகரித்து வைக்கின்றது. இந்த சேவை தத்துவத்தை பின்பற்றி நம்வழி வேளாண்மை ஒரு சிலரிடம் உள்ள உத்திகளையும் மற்றும் ஒரு பகுதியில் உள்ள பாரம்பரிய அறிவையும் எடுத்து வெளிக்கொணர்ந்து மற்றவர்களுக்கும் பிற பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தி மேலும் பலரும் பயன் பெற வழி வகுக்கின்றது.

### நம்வழி வேளாண்மை குழுமம் பிற மொழி இதழ்கள்

| | |
|---|---|
| ஆங்கிலம் | – தேனீ (Honey Bee) |
| குஜராத்தி | – லோக் சர்வானி |
| ஹிந்தி | – சூஜ் புஜ் ஆஸ் பாஸ்கி |
| ஒரியா | – அமா அகாபகா |
| தெலுங்கு | – பள்ளி ஸ்ருஜனா |
| கன்னடம் | – ஹித்தலகிடா |
| மலையாளம் | – இனிகர்ஷகான்சம்சாரிகட்டே |


**நம் வழி வேளாண்மை**

45, டி.பி.எம். நகர்,

விராட்டிபத்து, மதுரை – 625 016.

தொலைபேசி : 0452– 2380082, 2380943.

இமெயில் vivekseva@gmail.com



**ஆங்கில இதழ் முகவரி**

Prof. Anil Gupta,

**Honey Bee,**

SRISTI, AES Boys Hostel Campus,

Near Gujarat University Library & SBI Bank,

Navrangpura, Ahmedabad-380 009, Gujarat,

email: honeybee@sristi.org


## அறிவை அறிந்து தெரியப்படுத்தும் அறிவு

கடந்த 29 ஆண்டுகளாக நம் வழி வேளாண்மை மூலம் கிராமங்களில் உள்ள பாரம்பரிய வைத்தியர்கள், கண்டுபிடிப்பாளர்கள் பலரை அடையாளம் கண்டு அவர்களுடைய அறிவை அல்லது கண்டுபிடிப்பை தொகுத்து வெளியிட்டு வருகின்றோம். இவ்வாறு அறிவை அவர்களிடம் இருந்து பெற்ற பின் அறிவு மறைந்துவிடாமல் பிற ஊர்களில் அல்லது மாநிலங்களில் இந்த அறிவு பரவியுள்ளது அல்லது சிலர் பயன்படுத்தி வருகின்றனர். முன்பு குருகுல முறையில் பாரம்பரிய அறிவு இளையதலை முறையினருக்கு முறையாக கற்பிக்கும் வழக்கம் நடைமுறையில் இருந்தது. இம்முறை அந்நியர் ஆட்சிக்கு வந்தவுடன் புதிய கல்விமுறையில் சேர்க்கப்படவில்லை. இதனால் பெரும்பாலான பாரம்பரிய முறைகள் அழிந்துவிட்டன. வயதானவர்கள் காலமானபின் அவர்களுடன் அந்த அறிவும் மறைந்துவிட்டது.

இன்னும் பாரம்பரியம் அழியாமல் பாதுகாக்கும் இந்த அறிவை நம்வழி வேளாண்மை சேவை நோக்கில் தொகுத்து வெளியிட்டு வருகின்றது. தொகுத்தபின் இந்த அறிவினுடைய தொன்மை மற்றும் சிறப்பு நம்மை வியக்குமாறு செய்கிறது. ஏனெனில் தற்சமயம் சுற்றுச்சூழல் மாசுபடுதல், பருவநிலை மாற்றம் போன்ற சூழலில் நமது பாரம்பரிய அறிவு நமது ஆரோக்கியத்திற்கும், சுற்றுச்சூழல் மாசுபடாமல் இருப்பதற்கும் இயற்கையோடு இணைந்த பசுமைத் தொழில் நுட்பங்கள், இயற்கை வேளாண்மை, இயற்கை கால்நடை வளர்ப்பு போன்றன கைகொடுக்கின்றன. இதுவே நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கு அடித்தளமாகும். இந்தப் பணியில் பலரும் கலந்துகொண்டு பாரம்பரிய விஷயங்கள், புதிய கண்டுபிடிப்புகள் போன்றவற்றை பகிர்ந்து கொள்வோம்.

அறிவை அறிந்து தெரியப்படுத்தும் அறிவை பரவலாக்குவோம். அறிவார்ந்த சமுதாயம் உருவாக உறுதுணையாய் இருப்போம்.

கிராமங்களில் பாரம்பரிய அறிவு உறங்கிக் கொண்டுள்ளது. நம் வழி வேளாண்மை செல்லும் இடங்களில் உறங்கும் அறிவு விழிப்படைகிறது. இந்த நிகழ்வு ஒரு கண்கூடு. இந்த அறிவு கால வெள்ளத்தில் அடித்துச் செல்லாமல் இருக்க ஒரு தோணியாக செயல்படுவது ஒரு தானமன்றோ. தானத்தில் சிறந்தது அன்னதானமா அல்லது அறிவு தானமா?

– ஆசிரியர்

## கிடைக்காரர்கள் விருது 2021

உலகளவில் மேய்ச்சல் நிலம் பாதுகாத்தல், கிடைக்காரர்களின் இயற்கைவழி கால்நடை வளர்ப்பை பாதுகாத்தல் போன்ற காரணங்களுக்காக உலக மேய்ச்சல் நிலம் மற்றும் கிடைக்காரர்கள் ஆண்டாக 2026 ஐ அறிவிக்க ஏற்பாடு நடைபெற்று வருகின்றது. இதற்காக மங்கோலியா நாடு ஒரு தீர்மானத்தை கொண்டு வந்துள்ளது. இதனை உலக உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம் ஏற்றுக் கொண்டு ஐ.நா.சபையிடம் கொண்டு சென்றுள்ளது. இத்தருணத்தில் கிடைக்காரர்களின் கால்நடை பராமரிப்பு மூலம் பாரம்பரிய கால்நடை இனங்களையும் மேய்ச்சல் நிலத்தையும் பாதுகாக்கும் முறையினை பாராட்டி பரிசு வழங்க சேவா அமைப்பானது சகஜீவன், இல்சி, உலக மேய்ச்சல் நில மாநாட்டு கூட்டமைப்பு போன்ற நிறுவனங்களுடன் இணைந்து ஏற்பாடு செய்தது. இதன்படி தெற்கு ஆசியா, மத்திய ஆசியா, மங்கோலியா நாடுகளில் உள்ள சிறந்த கிடைக்காரர்கள் அல்லது அவர்களுடைய சமுதாய அமைப்புகளை தேர்வு செய்து சிறந்த 14 நபர்களுக்கு பரிசு கொடுக்கவும் இந்த பரிசினை உலகளாவிய மேய்ச்சல் நில கருத்தரங்கில் கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. பரிசு வழங்கும் விழா இணையவழி மூலம் 29.10.2021 அன்று நடைபெற்றது. பரிசு பெற்றோர் சிலரின் விவரம் பின்வருமாறு :

**அருணாச்சல பிரதேசத்தில் துங்ப்பா இன மக்கள் மேய்ச்சல் நிலத்தைப் பராமரித்தல்**



அருணாச்சலப் பிரதேச மாநிலத்தில் திரங் என்ற இடத்தில் 40 துங்ப்பா இன குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு 200 ஹெக்டேர் பொது நிலம் உள்ளது. இதில் 1850 யாக் மாடுகள் மேய்த்து வருகின்றனர். குளிர்கால மேய்ச்சல் நிலம் 24 ஹெக்டேர் நிலத்திலும் கோடைகால மேய்ச்சல் நிலம் 176 ஹெக்டேர் நிலத்திலும் மேய்க்கின்றனர். மேய்ப்பதிற்கு மாடுகளை அனுமதிக்கும் நாள் ஊர் கூட்டம் போட்டு பேசப்படுகிறது. மேய்ச்சல் நிலங்களில் மூங்கில், சாலிக்ஸ் போன்ற தீவன மரங்கள் நடப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. துங்ப்பா இன மக்களின் மேய்ச்சல் நில பாதுகாப்பு முறையை பாராட்டி சேவா நிறுவனம் இவர்களுக்கு "கிடைக்காரர் 2021" விருது கொடுத்துள்ளது. இந்த விருது 29.10.2021 அன்று கென்யா நாட்டில் நடைபெற்ற உலகளவிய மேய்ச்சல் நில மாநாட்டில் வழங்கப்பட்டது.

துங்ப்பா மக்களின் பாரம்பரிய அறிவு :

மர்முசிங் (Marmu shing) என்ற மரத்தின் இலைகளை யாக் மாடுகளுக்கு தீவனமாகக் கொடுத்தால் மாட்டின் பலம், ஆரோக்யம் கூடும். அக்கோனைட் (Aconite) என்ற மரத்தின் இலைகளை சிறிதளவு கொடுத்தால் மாடுகளுக்கு கழிச்சல் நிற்கும். அதிகம் கொடுத்தால் இது விஷமாகும். டென்சிங் (Ten shing) என்ற மரத்தின் இலைகளை கன்றுகளுக்கு தீவனமாகக் கொடுத்தால் வளர்ச்சி கூடும். இதனை காய்ச்சலுக்கும் பயன்படுத்தலாம்.

**பிச்சிட்காட் மேய்ச்சல் நில பாதுகாப்பு குழு:**



மங்கோலியா நாட்டில் பயோனச்சீர் என்பவர் 4 வது தலைமுறை கிடைக்காரர். இவர் செம்மறி ஆடுகளை

மேய்த்து வருகிறார். இவர் 2010ல் 38 குடும்பங்களை ஒருங்கிணைத்து பிச்சிட்காட் மேய்ச்சல் நில பாதுகாப்பு குழு ஏற்படுத்தி உள்ளார். இந்த குழுவிற்கு அரசாங்கத்திடமிடருந்து 1,93,98,000 ஹெக்டேர் பரப்பளவு மேய்ச்சல் நிலம் 15 வருடங்களுக்கு குத்தகைக்கு பயன்படுத்த ஒப்பந்தம் போட்டுள்ளார். ஒவ்வொரு ஆட்டிற்கு 100 மங்கோலியா பணம் பராமரிப்பு கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இதை வைத்து 16X 8 மீட்டர் இடத்தில் செட் அமைத்து உலர் தீவனம் பாதுகாக்கப்படுகிறது. மேய்ச்சல் நிலங்களில் வருடத்திற்கு 6–8 தடவைகள் மட்டும் ஆடுகளை மேய்க்கலாம். மற்ற நேரங்களில் புற்கள் வளர அவகாசம் தரப்படும். 15,000 ஹெக்டேர் நிலத்தில் பறவைகள் உட்காருவதற்கு வசதி செய்யப் பட்டுள்ளதால் எலி தொல்லையிலிருந்து புற்கள் சேதாரமாவது தடுக்கப்படுகிறது. ஆட்டு தோலை பதப்படுத்த குடிசை தொழில் துவங்கப்பட்டதால் ஆட்டு தோலுக்கு நல்ல விலை கிடைக்கிறது. 15,000 ஆடுகள் கோடையில் நீர் குடிப்பதற்கு நீர் ஊற்று பகுதியை சுற்றி 72 X 72 மீட்டர் இடத்தில் வேலி போடப்பட்டு பாதுகாக்கப்படுகிறது. மேய்ச்சல் நிலத்தில் ஆட்டு புழுக்கை உரம் தூவப்படுவதால் புற்களின் வளர்ச்சி கூடி உள்ளது. மேற்கண்ட பணிகளை பாராட்டி பிச்சிட்காட் மேய்ச்சல் நில பாதுகாப்பு குழு தலைவர் பயோனச்சீர்க்கு ஜேசில் (JASIL) என்ற தொண்டு நிறுவனம் “கிடைக்காரர் 2021” விருது கொடுத்துள்ளது. பரிசு தொகை ரூ. 35,000. இந்த விருது 29.10.2021 அன்று கென்யா நாட்டில் நடைபெற்ற உலகளவிய மேய்ச்சல் நில மாநாட்டில் வழங்கப்பட்டது.

**சரிபுலக் மேய்ச்சல் நில கூட்டமைப்பு**



கிர்கிஸ்தான் நாட்டில் சரிபுல மேய்ச்சல் நில கூட்டமைப்பில் 7,043 மக்கள் உறுப்பினர்களாக உள்ளனர். மேய்ச்சல் நிலம் 4,534 ஹெக்டேரில் உள்ளது. (கோடைகால மேய்ச்சல் நிலம் 1,219 ஹெக்டேர், வசந்தகால நிலம் 1,398 ஹெக்டேர் குளிர்கால மேய்ச்சல் நிலம் 1,917 ஹெக்டேர்). இவர்களிடம் 17,278 மாடுகள் உள்ளன.

கடந்த 7 ஆண்டுகளாக இந்த கூட்டமைப்பின் தலைவராக அஸநோவர் குவிஜன் என்ற பெண்மணி உள்ளார். மொத்த மேய்ச்சல் நிலத்தில் 38 சதவிகிதம் பகுதியில் புல் வளர்ச்சி போதுமானதாக இல்லை. இவர்களுடைய பாதுகாப்பு மற்றும் மீட்பு பணிகளால் இந்த இடங்களில் 50 சதவிகிதம் பகுதி மீண்டும் தளிர்த்து வருகிறது. மரத்தீவனப்பயிர்களை உருவாக்க நாற்றங்கால் ஒன்றை துவக்கியுள்ளனர். கடந்த 10 ஆண்டுகளில் இந்த கூட்டமைப்பு மூலம் 80 ஹெக்டேர் நிலத்தில் புற்கள், தீவன மரங்கள் குறிப்பாக மலைச்சரிவுகளில் நட்டுள்ளனர். சுமார் 6,000 ஹெக்டேர் நிலத்தில் வேலி போட்டு 5 வருடங்கள் வரை மேய்ச்சலுக்கு விடாமல் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இதனை ஈடுகட்ட 25 ஹெக்டேர் நிலத்தில் மக்காச்சோளம் விதை விதைக்கப்பட்டு 70 டன் தட்டைகள் அறுவடை செய்து தீவனமாக உபயோகப்படுத்துகின்றனர். மேய்ச்சல் நிலத்தில் தங்கி மேய்க்க தற்காலிக செட் வசதி சாமான்கள் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றன. ஆட்டு ரோமத்தை பதப்படுத்தும் தொழில், பாலிலிருந்து 15 வகையான மதிப்பு கூட்டும் பொருள்களை தயாரிக்க பயிற்சியும் பெண்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டமைப்பின் பணியை பாராட்டி ஜாசில் (JASIL) தொண்டு நிறுவனம் “கிடைக்காரர் 2021” விருதும் பரிசுத்தொகை ரூ. 35,000 வழங்கி கௌரவப்படுத்தியுள்ளது. இந்த விருது 29.10.2021 அன்று கென்யா நாட்டில் நடைபெற்ற உலகளவிய மேய்ச்சல் நில மாநாட்டில் வழங்கப்பட்டது.

## இயற்கை ஆட்டு பண்ணை



மதுரை மாவட்டம், திருமங்கலம் அருகே புதுப்பட்டி கிராமத்தில் திரு. லெட்சுமணன் கடந்த 5 வருடங்களாக ஆட்டு பண்ணை பராமரித்து வருகிறார். முன்பு இவர் பாரம்பரிய நாட்டு பசுக்கள் வைத்து இருந்தார். வேலையாட்கள் பிரச்சனையால் மாட்டு பண்ணையை விட்டு செம்மறி ஆடுகளை கொட்டில் முறையில் வளர்த்து வந்தார். செம்மறி ஆட்டு பராமரிப்பில் குட்டிகள் இறப்பு விகிதம் அதிகம் இருந்ததால் வெள்ளாடு வளர்த்து வருகின்றார். இவருடைய பண்ணையில் ஆடுகளுக்கு தடுப்பு ஊசியோ அல்லது குடற்புழு நீக்க மருந்தோ கொடுப்பதில்லை. கால்காணை, வாய்க்காணை போன்ற நோய் தாக்குதலும் வந்ததில்லை. கால்நடை மருத்துவரின் உதவியில்லாமலே ஆடு வளர்த்து வருகிறார். இதனால் பண்ணையின் பராமரிப்பு செலவு ஓரளவு குறைந்துள்ளது. ஆடு வளர்ப்பில் வேலையாட்கள் இல்லாமலே குடும்பத்தாருடைய ஒத்துழைப்புடன் செய்தால் வருடத்திற்கு வேலையாட்கள் செலவு நமக்கு லாபமாக கிடைக்கும் என கூறுகின்றார். இவர் பராமரிக்கும் 25 ஆடுகளிலிருந்து வருடத்திற்கு ரூ. 50,000 கிடைக்கும் என கூறுகிறார். வேலையாட்கள் போடும் பட்சத்தில் இந்த லாபம் அவர்களுக்கு சம்பளமாக போய்விடும். இவர் கடைபிடிக்கும் சில உத்திகள் பின்வருமாறு :

**அடர்தீவனம் :** மக்காச்சோளம், கம்பு, குருனை 100 கிராம், தவிடு 50 கிராம், புண்ணாக்கு 50 கிராம், வெல்லம் 50 கிராம், சேர்த்து ஓர் ஆட்டிற்கு அடர் தீவனமாகத் தரலாம். எக்காரணம் கொண்டு அரிசி, தானியத்தை பவுடராகத் தரக்கூடாது. சாதம் தரக்கூடாது. மாலை வேளையில் அடர் தீவனம் கொடுக்கிறார்.

கொட்டில் வளர்ப்பு ஆடுகளுக்கு பசுந்தீவனம் பகலிலும் உலர்தீவனம் (நாற்று சோளம்) இரவிலும் கொடுக்க நல்ல வளர்ச்சி கிடைக்கும். எடை கூடும். மரத்தழைகளான வாகை, வேம்பு, பூவரசு, சூபாபுல் போன்றவைகளை விரும்பி சாப்பிடும். வேலிமசால், துத்தி, சூப்பர் நேப்பியர் போன்ற பசுந்தழைகளை பகலில் நித்தமும் 3 முறை இட வேண்டும்.

**ஆட்டுக்கொட்டகை**

ஓர் ஆட்டிற்கு 10–12 சதுர அடி கொடுத்து செட் அமைக்கலாம். செட்டிற்கு வெளியே சில மணி நேரம் உலாவிவர திறந்த வெளி இடமிருப்பது அவசியம். ஓர் ஆட்டிற்கு 25–30 சதுர அடி திறந்த வெளி தேவை. நித்தம் தொழுவம் சுத்தம் செய்யப்பட்டு சாணம் அகற்றப்பட வேண்டும்.

தொழுவத்தில் கிருமிகளை அழிக்க 15 நாட்களுக்கு ஒரு முறை பினாயில் கலந்த நீர் (5 மி.லி 10 லிட்டர் நீரில் கலந்து) தெளிக்க வேண்டும் அல்லது சுண்ணாம்பு பிளீச்சிங் பவுடர் 3:1 விகிதம் சேர்த்து தூவ வேண்டும்.

அடர் தீவனத்துடன் 10 நாட்களுக்கொருமுறை சோற்றுக்கற்றாழை நறுக்கிக் கொடுக்கிறார். சோற்றுகற்றாழை கொடுப்பதை நம் வழி வேளாண்மை இதழில் படித்து பார்த்து பின்னர் இதனை கடைபிடித்து வருகிறார். (ஓடைப்பட்டி பொன்னுச்சாமி செம்மறி ஆடுகளுக்கு சோற்றுக்கற்றாழையை தினமும் ஒரு முறை கொடுத்து ஆட்டின் எடை கூடியது பற்றிய அனுபவம் “நம் வழி வேளாண்மை” பருவம் 15 இதழ் 4ல் 2007ம் வருடம் பிரசுரிக்கப்பட்டிருந்தது). மாதம் ஒரு முறை அமுக்கராக்கிழங்கு, சீந்தில், சிறியா நங்கை ஒரு சிட்டிகை ஒரு ஆட்டுக்கு தீவனத்துடன் கலந்து கொடுக்கிறார்.

லெட்சுமணன்
தென்காசி ரோடு, ரூபி கல்வியியல் கல்லூரி எதிரில்
டி. புதுப்பட்டி அஞ்சல், திருமங்கலம் தாலுகா
மதுரை மாவட்டம். செல் : 9842194848

## அகல் பண்ணை

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி தாலுகா, வல்லந்தி கிராமத்தில் அகல் பண்ணை உள்ளது. இந்த பண்ணையை திரு. மன்மோகன்சிங் 2007ல் நிறுவினார். இவருடைய ஆன்மீககுரு அத்தர்சிங்கின் ஒப்புதலுடன் வறண்ட பூமியை வளமாக்கி காட்ட முயற்சி எடுத்தார். இந்த பண்ணை 80 ஏக்கரில் உள்ளது. இதில் மா 35 ஏக்கர், தென்னை 10 ஏக்கர், நெல்லிக்காய் 15 ஏக்கர், கொய்யா 40 ஏக்கர் போன்றன உள்ளன. இப்பகுதியில் 350 அடியில் நீர் மட்டம் உள்ளது. திரு. மன்மோகன்சிங் 35 இடங்களில் போர் போட்டு அந்த நீரை ஒரு கிணற்றில் கொண்டு வந்து பிறகு பண்ணையில் உள்ள மரங்களுக்கு சொட்டு நீர் மூலம் பாய்ச்சுகிறார். இவர்களுக்கு மாமரம், தென்னை மரம், சாகுபடி பற்றி எதுவும் தெரியாமல் இருந்தாலும் கிருஷ்ணகிரி சென்று மாமரம் சாகுபடி போன்ற முறைகளை கற்றுக் கொண்டு வல்லுநராக உள்ளனர். இந்த பண்ணையில் 5 பசு மாடுகள் பாலுக்காக வளர்க்கப் படுகின்றன. இந்த பண்ணையில் 3 பஞ்சாபி குடும்பங்கள் மொத்தம் 20 நபர்கள் உள்ளனர். இங்கு அனைவரும் சைவ உணவு மட்டும் சாப்பிடுகின்றனர். இதனால் பசுவின் பால் இவர்களுக்கு தேவை உள்ளது. இது தவிர பஞ்சகவ்யா, மண்புழு உரம் தயார் செய்து மரத்திற்கு உரமாகக் கொடுக்கின்றனர்.




இந்த பண்ணையை பார்த்து பக்கத்தூர் மக்களும் மரம் வளர்ப்பு, நவீன விவசாயம் செய்ய ஆரம்பித்துள்ளனர். இதனால் இவர்களுடைய விவசாய வருமானம் கூடி உள்ளது. இவர்களின் வாழ்க்கை தரமும் உயர்ந்துள்ளது. இதற்கு காரணம் இந்த பண்ணையே எடுத்துகாட்டு.

மன்மோகன்சிங்

அகல் பண்ணை,

வல்லந்தி கிராமம், கமுதி தாலுகா,

இராமநாதபுரம் மாவட்டம். செல் : 8098517759

## சுந்தரியின் கோழி வளர்ப்பு



மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி தாலுகா, திருவெண்காடு பஞ்சாயத்து உக்கடை கிராமத்தில் வசிக்கும் திருமதி. சுந்தரி (வயது 46) நாட்டுக்கோழி வளர்த்து வருகிறார். இவரிடம் கடக்னாத் உள்பட நாட்டு கோழிகள் 150 உள்ளன. இக்கோழிகள் இரவில் வந்து அடையும். பகலில் வீட்டைச் சுற்றியுள்ள இடத்தில் மேய்ந்து வரும். இவர் தீவனச் செலவை குறைத்து புல் அறுத்து வந்து போடுகிறார். பொதுவாக ஆடு, மாடுகளுக்கு புல் அறுத்து வந்து இடுவது வழக்கம். இந்த புல்லை கோழிகளும் விரும்பு கொத்தி சாப்பிடுவதைப் பார்த்து நித்தமும் கோழிகளுக்காக 3 முறை புல் கட்டு இடுகிறார். முழுப்புல்லை கோழியே விழுங்கி விடுகிறது. காம்புகள் மட்டும் மீதமாகும். இதனை மாட்டுக்கு கொடுப்பார். கோழி வளர்ப்பில் நோயினால் பாதிப்பு ஏற்படாமலிருக்க சுக்கு, ஓமவல்லி, துளசி, வெற்றிலை, பச்சை மஞ்சள், வெங்காயம், பூண்டு, கருஞ்சீரகம் சேர்த்து அரைத்து மாதம் ஒரு முறை கொட்டைப்பாக்கு அளவு மருந்தை ஒவ்வொரு கோழிக்கும் தானே போட்டு வருகிறார். நோய் பரவி விட்டால் வாரம் ஒரு முறை போடுவார்.

### கோழி செட்டில் செல் இருந்தால்

பீகினாத்தி என்ற பீநாரி சங்கு இலை பரப்பி விட்டால் செல் தொல்லை வராமலிருக்கும் என கூறுகிறார். வீட்டருகில் குப்பை குழியில் மாட்டு எரு கொட்டி வருவார். இதனை கோழிகள் கிளறி புழுக்களை தின்னும். இது தவிர மண்பானையில் பழைய சாக்கு, காய்ந்த சருகுகள், வைக்கோல் போட்டு நீர் தெளித்து கவிழ்த்து தரை மீது வைப்பார். சில நாட்களில் கரையான் வைத்து விடும். இதனை திறந்து கோழிகளுக்கு உணவாகத் தின்னக் கொடுப்பார்.



அசோலாபாசி தயார் செய்து காலை ஒரு கிலோ, மாலை ஒரு கிலோ தீவனமாக தீவனத்தில் கலந்தோ அல்லது தனியாகக் கொடுக்க வேண்டும். இவர் கோழியை உயிருடன் கிலோ ரூ. 300 க்கும் கடக்கநாத் கோழியை ரூ. 450 க்கும் விற்பனை செய்கிறார். இவர் தனது மகன் உதவியுடன் சமூக வலைதளம் மூலம் தொடர்பு ஏற்படுத்தியமையால் வீடு தேடி கோழிகளை வாங்கிச் செல்கின்றனர். முட்டையை ரூ. 10க்கு தருகிறார். கோழி மூலம் மாதம் ரூ. 5,000 வருமானம் எடுக்கிறார். இது தவிர இவரிடம் 4 பசுமாடுகள், ஒரு ஆடு வளர்த்து நித்தமும் பால் வருமானம் பெறுகிறார். தனது 3 ஏக்கர் நிலத்தில் இயற்கை முறையில் நெல் சாகுபடி செய்கிறார்.

சுந்தரி, உக்கடை, திருவெண்காடு,
சீர்காழி தாலுகா
செல் : 9786796413

## கலியமுத்துவின் கால்நடை வைத்யம்



மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி தாலுகா, கொண்டல் தேனூர் கிராமத்தில் கலியமுத்து (வயது 80) வசித்து வருகிறார். இவர் முன்பு காளைக் கன்றுகளை வளர்த்து உழவுக்குப் பழக்கி வந்தார். தற்சமயம் 4 பசு மாடுகள் மட்டும் வைத்துள்ளார். இவருடைய கால்நடை வைத்தியம் கீழே தரப்பட்டுள்ளது.

**1. வயிறு உப்பிசம், தீனி எடுக்காமல் இருந்தால் :** மாடுகளுக்கு வயிறு உப்பிசம் ஏற்பட்டால் தீனி எடுக்காது. படுத்தே இருக்கும் இதற்கு மிளகாய்ப்பழ (வத்தல்) விதை ஒரு பழத்திலிருந்து எடுத்தது, மிளகு 2, துவரம் பருப்பு 2, சுக்கு, அரிசி 2 இவைகளை எடுத்து நொச்சி சாற்றில் சிறிது நேரம் வைத்து ஒரு மண் ஓட்டில் உரச வேண்டும். இதில் வரும் களிம்பை விரல்களால் எடுத்து இரு கண்களிலும் கலிக்கம் போட மாடு விரைவில் எழுந்து விடும் உப்பிசமும் குணமாகும்.

**2. சினைபிடிக்காத மாடுகளுக்கு :** வெந்தயம் 100 கிராம் ஊறல் போட்டது, சின்ன வெங்காயம் 100 கிராம் சேர்த்து அரைத்து வேப்பெண்ணெய் 200 மி.லி கலந்து உள்ளே தர வேண்டும். இதற்கு பின்னர் (முடையடித்த) மாட்டை சினை ஊசி அல்லது காளைக்கு கொண்டு செல்லலாம். இது தவிர மாற்று முறையாக யானை கொழிஞ்சி செடியினை இரவில் ஊறல் போட்டு காலையில் கிடைக்கும் கொழ கொழப்பான திரவத்தில் பழையசோற்று தண்ணீரை சேர்த்து உள்ளே தர வேண்டும்.

**வயிற்று கிருமிகளுக்கு:** பச்சை மஞ்சள் கிழங்கை அரைத்து நீரில் கலந்து உள்ளே தரவேண்டும்.

**பேன் உன்னிகளுக்கு:** தும்பைச்செடி, குப்பைமேனிச்செடி கைப்பிடி அளவு ஒவ்வொன்றும் எடுத்து அரைத்து மேலே உடம்பு முழுவதும் பூசி விட வேண்டும்.

**காம்பு வெடிப்பு மற்றும் வீக்கத்திற்கு:**

காளை மாட்டு கன்றுக்குட்டிகளை காயடித்தபின் ஏற்படும் வீக்கம், வலிக்கும், மடிகாம்பு வெடிப்பிற்கும் பச்சை மஞ்சள்கிழங்கை அரைத்து பசுவெண்ணையில் கலந்து பூசி விடவேண்டும்.

தொகுப்பு: பெ.விவேகானந்தன், சேவா

## கால்நடை வைத்ய பயிற்சி முகாம்

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி தாலுகா, இலையமுதுக்கூடம் கிராமத்தில் அக்டோபர் 20–21 நாட்களில் கால்நடை வைத்ய பயிற்சி முகாம் நடைபெற்றது. இதில் 30 மகளிர் தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் கால்நடை வைத்ய அனுபவத்தை உறுப்பினர்கள் பகிர்ந்து கொண்டனர்:

**1. மாட்டு காதில் சீழ் வடிந்தால்**

எங்கள் ஊரில் பக்கத்து வீட்டில் ஒரு மாட்டிற்கு தொடர்ந்து சீழ் வடிந்து வந்தது. இதற்கு டாக்டர் புண்ணியமூர்த்தி கூறிய படி தேங்காய் எண்ணெய் 100 மிலியில், மஞ்சள் தூள் 10 கிராம், வெள்ளை பூண்டு 4 பல் போட்டு காய்ச்சி ஆற வைத்து ஊற்றினேன். இதனால் சீழ் வடிந்தது நின்று விட்டது.

–லெட்சுமி, அல்லிவிளாகம்.

**2. காம்பு வெடிப்பிற்கு:** சீத்தா இலை (ஆத்தா இலை)யை அரைத்து பசுவெண்ணெயில் சேர்த்து காம்பில் தடவி வர வேண்டும். அல்லது குப்பைமேனி இலை, உப்பு சேர்த்து அரைத்து தட வேண்டும்.

## நெம்மேலி கலியமுத்துவின் மூலிகை வைத்யம்

சீர்காழி தாலுகா, நெம்மேலி கிராமத்தில் கலியமுத்து (வயது 85) வசித்து வருகிறார். இவர் 25 ஆண்டுகளாக சீர்காழி சத்திரம் மாட்டு பண்ணையில் கறவையாளராக வேலை பார்த்து வந்தார். அவ்வப்போது கால்நடை மருத்துவர் செய்யும் வைத்ய முறையை பார்த்து தானும் கற்றுக் கொண்டார். இவர் கடைபிடிக்கும் கால்நடை வைத்ய முறை பின்வருமாறு.



**சினை பிடிக்காத மாடுகளுக்கு**

வேப்பஎண்ணெய் 100 மி.லி, கற்பூரம் (ரூ. 5க்கு வாங்கி தூள் செய்தது) மஞ்சள் தூள் (ரூ. 5) சேர்த்து உள்ளே தர வேண்டும்.

**வயிறு உப்பிசத்திற்கு**

சோடா நீரில் உப்புக்கல்லு (இந்துஉப்பு) 50 கிராம் சேர்த்து உள்ளே தர வேண்டும். அரிசி தின்று வயிறு உப்பிசம் ஏற்படும். ஆடுகளை குணப்படுத்துவது கடினம். சிலர் இதற்கு நல்லெண்ணெய் கொடுக்கின்றனர். அரிசி சிறிதளவு சாப்பிட்ட ஆடுகளுக்கு மட்டும் பயன் தரும்.

**கோமாரி நோய்க்கு**

மாட்டுக்கு தொடை, கால் இடுக்கில் புண் வந்தால் செங்கல் தூளை பவுடராக நுணுக்கி புண் இருக்கும் இடத்தில் இட வேண்டும்.

**படுத்த மாடு எழுந்திருக்க**

பெரியாநங்கை இலையை, அரைத்து உள்ளே தர வேண்டும்.

**மடி வீக்கம், மடி நோய்க்கு**

சின்னித்தழையை அரைத்து பசும்பாலில் உள்ளே தர வேண்டும். இந்த தழையை முட்டை வெள்ளை கருவுடன் கலந்து மடியில் பூசி விட வேண்டும்.

## புதிய முறை குழி எடுத்து உரமிடுதல்




கரும்பு, வாழைக்கு 3 அடி விட்டமுள்ள குழி 2 அடி ஆழம் எடுத்து பின் மண் போட்டு அதில் கரும்பு (3 கணு உள்ளது) 6 கரணைகள் நட வேண்டும். அல்லது வாழை என்றால் ஒரு கன்று நட வேண்டும். கரும்புக்கு 16 அடி இடைவெளியில் குழிக்கு குழி இருக்க வேண்டும். வாழைக்கு 20 அடி இடைவெளியில் குழிகள் எடுக்க வேண்டும். 4 குழிகளுக்கு நடுவில் 2 x 2 1/2 வெப்பாத்து குழி எடுத்து அதில் சருகு மண் போட்டு மூடி விட வேண்டும். 4 குழி வரிசைக்கு நடுவில் ஓர் உரக்குழி 3 அடி அகலத்தில் நடுப் பகுதி ஒரு அடி ஆழத்தில் வடைசட்டி போன்று நிலா வடிவில் எடுத்து அதில் குப்பை, சருகு போட்டு விட வேண்டும். மண் போட்டு மூடி விட கூடாது. வெப்பாத்து குழியை புரட்டாசி மாதம் மூடி விட வேண்டும். மார்கழி அல்லது தையில் திறந்து விட வேண்டும். இதனால் வேர்களுக்கு நல்ல காற்றோட்டம் கிடைக்கும். மழைக்காலத்தில் மூடி விட வேண்டும். நிலத்தில் வெப்பம் ஏற்பட்டு மழை நீர் நன்கு உறிஞ்சி நீர் சேமிப்பு ஏற்படும். ஆரம்பத்தில் கன்றுகளை நடும் சமயம் மட்டும் நீர் வசதி தேவை. 2–3 மாதங்கள் தெளிப்பு பாசனம் மூலம் பாய்ச்சலாம். பின்னர் நீர்ப்பாசனம் தேவையில்லை. உரக்குழியில் போடும் குப்பை உரமே போதுமானது.

**காய்க்காத தென்னைக்கு:**

எனது தோட்டத்தில் 2 தென்னை மரங்கள் காய்க்காமல் இருந்தன. இதற்கு சுமார் 15 அடி தள்ளி 2 x 2 1/2 குழி எடுத்து வருடத்தில் புரட்டாசி – மார்கழி வரை மூடி வைத்து பின் தை மாதம் குழியை திறந்து விடுவேன். இவ்வாறு செய்த சில மாதங்களில் தென்னை காய்க்க ஆரம்பித்தது. இந்த முறையை தமிழர் விவசாய நிபுணர் மயிலாடுதுறை திரு. ஞானபிரகாஷத்திடமிருந்து (செல் : 9360551353) தெரிந்து கொண்டேன்.

லெட்சுமணன்
தென்காசி ரோடு, ரூபி கல்வியியல் கல்லூரி எதிரில்
டி. புதுப்பட்டி அஞ்சல், திருமங்கலம் தாலுகா
மதுரை மாவட்டம். செல் : 9842194848

## கால்நடைகளுக்கு மூலிகை வடகம் தயாரித்தல்



கால்நடைகளுக்கு பெரும்பாலும் மசாலா உருண்டை கொடுக்கும் பழக்கம் பாரம்பரியமாக இருந்து வருகிறது. ஆன
ால் மூலிகை மசாலா உருண்டை தயார் செய்து அதிக நாட்கள் (3–7 நாட்களுக்குள் பயன்படுத்த வேண்டும்)

வைத்திருக்க முடியாது. இதனை கறி வடகம் தயாரிப்பது போன்று தயாரித்து பல மாதங்கள் வைத்திருக்கலாம். இவ்வாறு தயார் செய்யும் சமயம் மூலிகைப் பொருட்களோடு சின்ன வெங்காயம், விளக்கெண்ணெய் சேர்த்து பிசைந்து வெயிலில் அல்லது நிழல் காய்ச்சலில் ஒரு வாரம் வைத்திருந்து பாதுகாத்து வைத்து கொள்ளலாம். ஆனால் வெல்லம், தேங்காய் துருவல் சேர்த்து கொள்ள கூடாது. இதனை மாடுகளுக்கு கொடுக்கும் சமயம் வெற்றிலையில் வைத்து கொடுக்க வேண்டும். மதுரை, விராட்டிபத்து, மூர்த்தி பண்ணையில் இதனை தொடர்ந்து கொடுத்து வர மஞ்சள் காமாலையிலிருந்து நிவாரணம் கிடைத்தது. ஆனால் பால் அளவு இன்னும் அதிகரிக்கவில்லை. இதற்கு இன்னும் சில காலம் ஆகலாம்.

இந்த வடகம் தயாரிக்கும் பயிற்சி முறை சீர்காழி தாலுகா இலையமுதுக்கூடத்தில் வளநாடு விவசாய உற்பத்தியாளர்கள் அமைப்பின் மூலம் அக்டோபர் மாதத்தில் கொடுக்கப்பட்டது.

எம். செல்லம், சேவா
45, டிபிஎம் நகர், விராட்டித்து, மதுரை – 625016

## நெம்மேலி இராமானுஜம் பிள்ளையின் கால்நடை வைத்தியம்



சீர்காழி தாலுகா, நெம்மேலி இராமானுஜம் பிள்ளைக்கு 92 வயதாகிறது. இவர் 7 வயதில் தாய் தந்தையரையிழந்து கிடைமாடுகளை பராமரித்து வந்தார். இவர் மாடுகளுக்கு எந்த வியாதியானாலும் மூலிகைவைத்யம் மூலம் குணப்படுத்துவார். ஈனமுடியாமல் சிரமப்படும் மாடுகளுக்கு தனது கையை பிறப்புறுப்பில் விட்டு கன்றினை இலகுவாக எடுத்து விடுவார். இவரது வைத்ய முறைகள் சிலவற்றை இவரது மருமகள் ராணி பழகிக் கொண்டார். இவர் கடைபிடித்த சில வைத்ய முறைகள் பின்வருமாறு.

**கோமாரி நோய்க்கு**

வேப்பம்பட்டை சாம்பிராணி சேர்த்து புகை மூட்டம் போட்டு மாடுகளுக்கு காட்ட வேண்டும். இத்துடன் மொந்தன் வாழைப்பழத்தை (2) பன்றி நெய்யில் தடவி உள்ளே தர வேண்டும்.

**கொம்பு ஒடிந்து விட்டால்**

ஒடிந்த கொம்பை நேராக வைத்து ஆலம்பாலில் நனைத்த துணி கொண்டு இறுகக் கட்டி விட வேண்டும்.

**வயிறு உப்பிசம், ஜுரத்திற்கு**

மிளகாய் வத்தல் 4 அரைத்து நல்லெண்ணெயில் கலந்து கண், காது, மூக்கில் பூசி விட வேண்டும். இது பார்ப்பதற்கு கொடூரமாக இருந்தாலும் ஒரு மணி நேரத்தில் நிவாரணம் கிடைக்கும் எனச் சொல்கிறார். பின் வெற்றிலை, சுக்கு, அரைத்து உள்ளே தர வேண்டும். இவரது வீட்டில் உள்ள பால் மாட்டிற்கு தினமும் 4 படி மாவு (3 வேளையில் பிரித்து நீரில் கலந்து தரப்படுகிறது). மாவு தயாரிக்க குருனை அரிசி 20 கிலோ, கோதுமை 10 கிலோ, கொண்டைக்கடலை 2 கிலோ, பாசிப்பருப்பு 2 கிலோ, மக்காச்சோளம் 2 கிலோ சேர்த்து மிருதுவாக அரைத்து வைத்துக் கொள்ள வேண்டும்).

முன்பு விவசாயிகளிடமுள்ள கிடைமாடுகள், நாட்டு மாடுகளை ஒன்றாக சேர்த்து மேய்ப்பர். பங்குனி மாதத்திலிருந்து ஆடி மாதம் வரை மேய்ப்பர். இச்சமயத்தில் மாடுகள் சினைக்கு வந்து சினை பிடித்து விடும். இம்முறை வழக்கத்தில் கிட்டத்தட்ட மறைந்து விட்டது. ஆனால் மருதங்குடியில் மட்டும் ஒரே ஒரு கிடை உள்ளது.

இராமானுஜம் பிள்ளை, நெம்மேலி கிராமம்,
சீர்காழி தாலுகா, மயிலாடுதுறை மாவட்டம்.

## பர்கூர் பகுதி கால்நடை வைத்யம்



**கால் எலும்பு முறிவுக்கு**

முடக்கத்தான் செடியை அரைத்து வரும் பசையை முறிவு ஏற்பட்ட இடத்தில் தடவ வேண்டும்.

**பாம்பு கடித்தால்**

மாட்டின் நாக்கு நிறம் மாறும். இதற்கு புரசமரப்பட்டையை இடித்து கருமிளகு வெள்ளைப்பூண்டு, சுடுநீரில் கலந்து வாய்வழியே உள்ளே தர வேண்டும்.

கென்ஜே கவுடா
ஊசிமலை, பர்கூர், அந்தியூர் தாலுகா,
ஈரோடு மாவட்டம். செல் : 9482191791

## வேலுச்சாமியின் கொரங்காடு அனுபவம்



கால்நடை மேய்ச்சலுக்கு பராமரிக்கப்படும் கொரங்காடு தாராபுரம் பகுதியில் காணப்படுகிறது. பழனி கவுண்டன்வலசு கிராமத்தில் திரு. வேலுச்சாமிக்கு சுமார் 10 ஏக்கர் கொரங்காடு நிலம் உள்ளது. இதில் கொளுக்கட்டை புல் வெளியும் வெல்வேலா மரங்களும் உள்ளன. இதில் 40 செம்மறி ஆடுகள் மேய்த்து வருகிறார். இவருடைய பாரம்பரிய அறிவு மற்றும் கொரங்காடு புற்கள் பற்றிய அறிவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**சவரி கொடி**

ஆடு, மாடுகளுக்கு சுவை நன்றாக இருக்கும். இதனை மேய்ந்தால் நோய் எதுவும் வராது.

**பழம்பாசி செடி**

ஆடு, மாடுகளுக்கு கழிச்சல் நிற்க பழம்பாசி செடி மிகவும் பயன் உள்ளது. செறுமல் நீக்கி விடும்.

**செப்பு நெருஞ்சி**

ஆடு, மாடுகள் இதை உண்டால் எடை கூடும். இது பருத்திக் கொட்டைக்கு நிகரானது.

**மிஷ்ட தழை**

ஆடு, மாடுகள் இதை உண்டால் இவைகளின் எடை அதிகரிக்கும்.

**தாதரா செடி**

ஆடு, மாடுகள் இதை உண்டால் உடல் பலம் பெறும். இரத்தத்தை சுத்திகரிக்கும், காய்ச்சல் மற்றும் வியாதிகள் நீங்கும்.

**அரிசி புல்**

ஆடு, மாடுகள் நன்றாக சாப்பிடக் கூடியது. ஆரோக்கியமாக வளரும்.

**ஆகாஷ கிழங்கு**

ஆடு, மாடுகளுக்கு விஷக்கடி, வயிற்றுப்புண், செரிமானக் கோளாறு இருந்தால் ஆகாஷ கிழங்கு கொஞ்சம், சிறியாநங்கை, பெரியாநங்கை தழை கொஞ்சம் எடுத்து மூன்றையும் சேர்த்து வெள்ளாட்டு பாலில் அரைத்து ஒரு வேளை கொடுத்தால் சரியாகி விடும்.

**மடி வீக்கம் நீங்க**

எலுமிச்சம் பழ சாற்றில் ஒரு சாக்பீஸை உரசி நன்றாக மடியை சுத்தமாக கழுவி விட்டு பின்னர் சாக்பீஸில் உரசிய இந்த சாறை மடி முழுவதும் தடவி விட்டு சாயங்காலம் 2 மணிக்கு பிறகு திரும்ப 2 முறை தடவி விட்டு பின் கழுவி விட்டால் மடி வீக்கம் நீங்கி விடும்.

ஆர்.பி. வேலுச்சாமி கவுண்டர்
எல்லை தோட்டம், பழனி கவுண்டன்வலசு
நல்லாம்பாளையம் அஞ்சல், தாராபுரம் தாலுகா
திருப்பூர் மாவட்டம் – 638 661
செல் (தொடர்பு ): 9486055094, 9524472395

## அடிமட்ட கண்டுபிடிப்பாளர்கள் சங்கத்தின் 21வது பொதுக்குழுக் கூட்டம்




அடிமட்ட கண்டுபிடிப்பாளர்கள் சங்கத்தின் 21வது பொதுக்குழுக் கூட்டம் மதுரை மாவட்டம், மேலக்கால் கிராமத்தில் திரு. பி.எம் முருகேசனின் வாழைநார் கயிறு தயாரிப்புக் கூடத்தில் 19.09.21 தேதி நடைபெற்றது. கூட்டத்தில் பல மாவட்டங்களிலிருந்து 25 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்திற்கு சங்கத் தலைவர் திரு. கந்தராஜ் தலைமை தாங்கினார். உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்களது கண்டுபிடிப்பைப் பற்றி எடுத்துரைத்தனர். வாழைநார் இயந்திரம் உருவாக்கிய திரு. பி.எம் முருகேசன் பேசும் போது உறுப்பினர்கள் உறுதியுடனும் விடா முயற்சியுடனும் செயல்பட்டால் கண்டிப்பாக நல்ல நிலைமைக்கு வர முடியும் என்றார். பதிவு செய்யப்பட்ட குடிசைத் தொழிலிருந்து தனியார் கம்பெனியாக பதிவு செய்த முறையை விளக்கமாக கூறினார். தற்சமயம் வாழைநார் பொருட்கள் தயாரிக்கும் கூடத்தில் நித்தமும் 200 நபர்கள் வரை வேலை செய்கின்றனர். இதே போன்று கேரளா மாநிலத்திலும் கொல்லம் மாவட்டத்தில் உள்ள சேத்தலை கிராமத்தில் சுவாமி மடத்தில் 50 விதவைப் பெண்கள் இருப்பதாகவும் அவர்களுக்கு பயிற்சி கொடுத்து அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்த வாழைநார் மூலம் கைவினைப் பொருட்கள் உற்பத்தி செய்யும் கூடம் துவக்கப்பட்டுள்ளது. இவர் ஆரம்பக் காலத்தில் பல கஷ்டங்களை சந்திக்க நேர்ந்தாலும் இவருடைய விடா முயற்சி கைகொடுத்தது. ஆரம்பத்தில் சைக்கிள் சக்கரத்தை வைத்து சுழற்றி கயிறு பின்னினார். தற்சமயம் மின்சாரம் மூலம் இயங்கும் இயந்திரத்தை வடிவமைத்து உற்பத்தித் திறனைக் கூட்டி உள்ளார். மதிய உணவுக்குப் பின் பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. சங்கத்தின் ஆண்டு அறிக்கை மற்றும் வரவு செலவு அறிக்கையை பொருளாளர் திரு. காயத்திரிபிரசாத் வாசித்தார். கூட்டத்தில் புதிய நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர். மரம் கருணாநிதி பாரம்பரிய தின்பண்டங்களை தனது ஊரிலிருந்து தருவித்து கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் வழங்கினார். திரு கந்தசாமி தான் விளைவித்த பாரம்பரிய காரம் நிறைந்த சிறிய மிளகாய்ப் பழங்களை (விதைக்காக) அனைவருக்கும் வழங்கினார். திரு. பழனிவேல் நன்றியுரையுடன் கூட்டம் இனிதே முடிவுற்றது.

## செக்கு எண்ணெய் தரம் கூட்ட

செக்கு எண்ணெய் ஆட்டும் சமயம் 10 கிலோ தேங்காய்க்கு ஒரு எலுமிச்சம்பழம் சேர்க்க வேண்டும். அல்லது 10 கிலோ தேங்காய்க்கு 10 ஏலக்காய், மகிழம்பூ காய வைத்து 25 கிராம் சேர்க்க வேண்டும். இதனால் எண்ணெயின் மணம் கூடும்.

**மூலிகை பூச்சி விரட்டி**



ஆடாதொடை, எருக்கு, ஊமத்தை, எட்டி இலை, வேப்பம் புண்ணாக்கு, தும்பை, நொச்சி, வெற்றிலை, துளசி, சோற்றுக்கற்றாழை, ஒவ்வொன்றும் 5 கிலோ எடுத்து ஒரு 200 லிட்டர் பிடிக்கும் பேரலில் மாட்டு கோமியம் நிரப்ப வேண்டும். இத்துடன் கடுக்காய்த்தூள் 2 கிலோ, பெருங்காயம் ஒரு கிலோ, மஞ்சள் தூள் ஒரு கிலோ சேர்த்து ஊறல் போட வேண்டும். 48 நாட்கள் ஊற வைக்க வேண்டும்.
இதிலிருந்து ஒரு லிட்டர் கரைசல் எடுத்து 10 லிட்டர் நீரில் கலந்து பயிருக்கு தெளிக்க பூச்சி தாக்குதல் கட்டுப்படும். இதனை 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்க பூச்சி தாக்குதலிலிருந்து நல்ல பாதுகாப்பு கிடைக்கும்.

கோவிந்தராஜு ரெட்டி, குன்னவாக்கம்,
சாலவாக்கம் வழி , உத்திரமேரூர் தாலுகா
காஞ்சிபுரம் மாவட்டம் - 603107
செல் : 9789775266

## நெல்லில் களையெடுக்க செலவில்லாத களையெடுப்பான்



விருத்தாச்சலத்தில் சுசீந்தர் (36 வயது) என்ற இளைஞர் 4 ஏக்கரில் நெல் சாகுபடி செய்து வருகிறார். இவர் கேட்டரிங் டெக்னாலாஜி படித்துள்ளார். விவசாயம் தவிர கல்யாணம் போன்ற விசேஷங்களுக்கு காய்கறிகளை வைத்தே வரவேற்பு பலகை செய்து கொடுக்கிறார்.



இவர் நெல் பட்டநடவு வயலில் 30 நாட்களுக்குள் களையெடுக்க ரூ. 500/–க்கும் குறைவான பொருட்களைக் கொண்டு கருவியை உருவாக்கியுள்ளார். நெல்வயல்களில் நடும் சமயம் சுமார் 8 அடிக்கு ஒரு இடைவெளியில் நடந்து செல்ல சிறு இடைவெளியிருக்கும். இதில் நடந்து சென்று இந்த கருவியை இருபுறமும் படுமாறு வைத்து இழுத்துச் செல்லாம். இதனை பசுமைவிகடன் பத்திரிக்கையில் பிரசரித்திருந்தார்கள். தற்சமயம் பலரும் இந்த வடிவமைப்பை பயன்படுத்தி களையெடுத்து வருகின்றனர்.

இந்த கருவி படத்தில் காட்டியபடி கட்டுக்கம்பி மற்றும் மத்தாப்புக் கம்பிகளை வைத்து வடிவமைக்கலாம்.

இந்த கருவியை களையெடுக்க பயன்படுத்தும் சமயம் இலை சுருட்டு புழு கீழே உதிர்ந்து தாக்குதல் குறைந்து விடும். இந்த கருவியை வைத்து அறுவடைக்கு முன் நிலத்தில் ஈரத்தன்மையை உலர்த்த (நடந்து செல்லும் பாதையின் இருபுறமும்) அழுத்தி மடக்கினால் பயிர் சாய்வாக சாய்ந்து இடைவெளி தரும். இது கையால் செய்வதை விட இந்தக் கருவி கொண்டு (கம்பிகளை மட்டும் எடுத்து விட வேண்டும்) செய்வது ஆள் வேலையைக் குறைக்கும். நெல் காய வைக்கும் சமயம் பரசவும், கிண்டவும் இக்கருவியை பயன்படுத்தலாம்.

எம். சுசீந்தர்
த/பெ. முருகவேல், பெண்ணாடம் ரோடு,
விருத்தாச்சலம் –6066001
கடலூர் மாவட்டம், செல் : 9952637722

## ஆடுகளுக்கு மூலிகை மருத்துவம் –

இணையவழி செயல் விளக்கம் :

கொட்டாம்பட்டி, செப்டம்பர் 8, 2021

மதுரை மாவட்டம், கொட்டாம்பட்டியில் வயலக வானொலி மற்றும் சேவை அமைப்பினர் சார்பில் ஆடுகளுக்கு மூலிகை மருத்துவம் வழங்குவது குறித்து இணையவழி செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

சேவா அமைப்பு நிர்வாகி விவேகானந்தன் மழைக் காலங்களில் ஆடுகளுக்கு நோய்கள் வராமல் பராமரிக்கவும், நோய் வந்த பின் மூலிகை

மருத்துவத்தின் மூலம் குணப்படுத்தவும் பயிற்சி அளித்தார். விவசாயிகளின் சந்தேகங்களுக்கும் விளக்கம் அளித்தார். பல்வேறு மாவட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

கீழ்க்கண்ட லிங்க் (இணைய தொடுப்பு) மூலம் மற்ற விவரங்களை பார்த்து கொள்ளலாம்.

https://youtu.be/S8WYQfwpumA

## வாசகர் வட்டம்

### கோழி சளிக்கு

கோழி சளியானது மழைக்காலத்தில் ஆங்காங்கே தேங்கும் கலங்கல் நீரை குடிப்பதால் வருகிறது. சளி வந்து விட்டால் கழுத்து பகுதி குறுகும். இறகு தொங்கும். நடக்காது. இரை தின்னாது காய்ச்சல் இருக்கும். சளி அதிகமாக மூக்கில் மூச்சு விட முடியாது இறக்கும். இதற்கு கடந்த 30 ஆண்டுகளாக பல மூலிகை வைத்யம் செய்து பார்த்தும் நல்ல நிவாரணம் கிடைக்கவில்லை. இது வரை கோழிகளுக்கு கொடுக்கப்படாத மூலிகை முசுமுசுக்கையை எடுத்து தட்டி சாறு எடுத்து சிறு உறிஞ்சான் (இங்க் பில்லர்) மூலம் 10 சொட்டு உள்ளே கொடுத்தேன். சிறிது சிறிதாக 3 தடவை விட்டேன். சிறிது நேரம் கழித்து மீண்டும் 3 தடவை விட்டேன் சுமார் 10 நிமிடங்களில் எழுந்து நின்றது. கண்ணில் பார்வை குறைந்து இருப்பதைப்பார்த்து தேங்காய் நறுக்கி சில்லு போட்டேன். நன்றாக எடுத்துக் கொண்டது. 30 நாட்களில் வளர்ச்சியில்லாமலிருந்து மீண்டும் நல்ல நிலைமைக்கு வந்து விட்டது.

**என். பொன்னுசாமி,**
**ஓடைப்பட்டி, அம்பிளிக்கை வழி, ஒட்டன்சத்திரம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். - 624612**
செல் : 8610518681

### வாழைநார் திரிக்கும் இயந்திர பயிற்சி

2018ம் ஆண்டு ஐ.சி.ஆர் மூலம் கேரளா மாநிலம் திருவனந்தபுரத்தில் கண்காட்சி நடைபெற்றது. இதில் சேவா சங்க உறுப்பினர் முருகேசனின் வாழைநார் கைவினைப் பொருட்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டது. கண்காட்சிக்கு வந்திருந்த கேரளா ஆளுநர் திரு. சதாசிவம் அவர்கள் முருகேசன் அங்காடிக்கு சென்று கைவினைப் பொருள்களை பற்றி தமிழில் கேட்டறிந்தார். முருகேசனைப் பாராட்டிய கவர்னர், கேரளா மாநிலம், கொல்லம் மாவட்டத்தில் உள்ள சேத்தலை கிராமத்தில் சுவாமி மடத்தில் 50 விதவை பெண்கள் இருப்பதாகவும் அவர்களுக்கு பயிற்சி கொடுத்து அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்தும்படி கேட்டுக் கொண்டார்.

ஆளுநர் கேட்டுக் கொண்டதன்படி அங்குள்ள 50 விதவைப் பெண்களுக்கு ஒருவாரம் தங்கி பயிற்சி கொடுத்து அவர்கள் நாள்தோறும் ரூ. 250 ஊதியம் பெறும் வகையில் வாழைநார் பொருள்கள் உற்பத்தி மையத்தை ஆரம்பித்துள்ளார். அவர்களுக்கு தேவையான மூல பொருள்கள் கொடுத்து உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் பெற்று சந்தைபடுத்தி வருகிறார்.

முருகேசன்,
மேலக்கால், மதுரை மாவட்டம், செல் : 9360597884

**கோழி கழிச்சலுக்கு :** கற்பூர வள்ளி (ஓமவள்ளி இலை), கீழாநெல்லி வேர், மிளகு, சீரகம், மஞ்சள் சேர்த்து அரைத்து ஒவ்வொரு கோழிக்கும் உள்ளே ஊற்ற வேண்டும். கோழிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பொருட்களை தேவையான அளவு எடுத்து கொள்ளலாம். நித்தமும் கோழி அடையும் இடத்தில் நீரில் பினாயில், டெட்டால் கலந்து தெளித்து வர வேண்டும்.

அனுஷ்யா, இலையமுதுகூடம், சீர்காழி தாலுகா
செல் : 9791922781

### கால்நடை வைத்ய பயிற்சியில் பாடப்பட்ட பாடல்:

கற்று பழக வந்தோம் கிளியே கிளியே
கால்நடை வைத்யமாம் கிளியே கிளியே
சுற்று ஊர்களெல்லாம் கிளியே கிளியே
பெற்ற வித்தை சேரவேண்டும் கிளியே கிளியே
முன்னோர்கள் ஞானமடி கிளியே கிளியே
இன்னும் நன்மைபல இருக்குதடி கிளியே கிளியே
விண்ணோர்கள் மகிழ்ந்திடவே கிளியே கிளியே
சொன்னாரை வாழ்த்திடுவோம் கிளியே கிளியே
முந்தி தொழுதிடவே கிளியே கிளியே
தொந்தி கனநாதரடி கிளியே கிளியே
நந்தி தேவனாலே கிளியே கிளியே
வந்த ஞானமடி கிளியே கிளியே

வாயில்லா ஜீவனடி கிளியே கிளியே
வையத்தில் வாழ வேண்டும் கிளியே கிளியே
நோயில்லா பார்க்க வேண்டும் கிளியே கிளியே
பேயா மழை பெய்ய வேண்டும் கிளியே கிளியே
இலையமுதுகூடமதில் கிளியே கிளியே
கலையறிவு பெற்றோமடி கிளியே கிளியே
நிலையுறுதி ஏற்போமடி கிளியே கிளியே
விலையில்லா சேவையடி கிளியே கிளியே

**தென்னை மரத்தில் வெள்ளை ஈ தாக்குதலுக்கு**

மன்னார்புர (திசையன்விளை) லிவிங்ஸ்டன்ராஜா வாத்தியார் தன்னுடைய தென்னை மரத்தில் சுருள் வெள்ளை ஈயை கட்டுப்படுத்துவதற்காக 40 லிட்டர் மகாஅக்னி அஸ்திரமும், 40 லிட்டர் நாட்டு மாட்டு மகா அக்னிஅஸ்திரமும், 40 லிட்டர் நாட்டு மாட்டு சிறுநீரும் கொடுத்தேன். இதனை (மகாஅக்னி அஸ்திரம் 200 மி.லி + 400 மி.லி கோமியம் + 10 லிட்டர் தண்ணீரில் தெளிக்க வேண்டும்). மூன்றுநாள் இடைவெளி விட்டு இரண்டு முறை தெளிக்க முற்றிலும் வெள்ளை ஈ கட்டுப்பட்டது.

**நஞ்சில்லா சிற்றுண்டியால் தீபாவளி கொண்டாடுதல்**

எங்கள் வள்ளியூர் வட்டார மகேந்திரகிரி பாரம்பரிய விவசாயிகள் சங்கம் மூலம் தேன்குழல் மிட்டாய், முறுக்கு, அதிரசம் தயாரித்தோம். இதற்கு எங்கள் பண்ணையில் இயற்கையில் விளைந்த காட்டுயானம் பச்சரிசி, புளியங்குடி அந்தோணிசாமி வெல்லம், செக்கெண்ணெய் கொண்டு தயாரித்து 50 நபர்களுக்கு கொடுத்தோம். ஒவ்வொருவருக்கும் 5 கிலோ எடையுள்ள பலகாரங்கள் ரூ. 1500 க்கு கொடுத்தோம். நஞ்சில்லா சிற்றுண்டியால் தீபாவளியை சிறப்பாகக் கொண்டாடினோம்.

ச.மகேஸ்வரன்
16, கட்டபொம்மன் தெரு, தளவாய்புரம், பணகுடி
நெல்லை மாவட்டம் – 627109,
செல் : 7598419861, 6379293634

**பாம்பு கடிக்கு**

சென்ற மாதம் சினிமா டைரக்டர் ஒருவருக்கு பாம்பு தீண்டிவிட உடனடியாக பசுமை விகடன் பத்திரிக்கை ஆசிரியரை தொடர்பு கொண்டு இதற்கு மூலிகை வைத்யம் உண்டா என்று கேட்டுள்ளார். பின்னர் புண்ணியமூர்த்தியை அணுக அவரும் நான் ஏற்கனவே பாடல் மூலம் தெரிவித்த மருந்தை கொடுத்து உயிர் பிழைத்ததாக தகவல் கிடைத்தது. இதன்படி வெற்றிலை, மிளகு, உப்பு சேர்த்து கொடுத்து உயிர் பிழைத்துள்ளார். இப்பாடல் பின்வருமாறு :

மண்ணில் வேந்தன் மலையில் முனிவன்
உண்ணும் சோற்றுக்கு ருசியானவன்
கண்ணில் காதில் மூக்கில் விட
விண்ணில் போன உயிர் திரும்புமே

**என். பொன்னுசாமி, ஓடைப்பட்டி, அம்பிளிக்கை வழி,
ஒட்டன்சத்திரம் தாலுகா,
திண்டுக்கல் மாவட்டம் - 624612 செல் : 8610518681**

**பைரவி உளுந்து ரகம் :**



இந்த ரகத்தை குஜராத் மாநிலம் ரஜினிபாய் பட்டேல் உருவாக்கியுள்ளார். இந்த ரகத்திற்கு தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளை பரிசு கொடுத்துள்ளது. இதை நான் நம் வழி வேளாண்மை இதழ் மூலம் பெற்றுக் கொண்டு 27.6.2021 அன்று 1/2 கிலோ விதையை சுமார் 25 சென்ட் நிலத்தில் விதைத்தேன். இதில் காய்கள் நன்கு பிடிந்திருந்தன. ஒரு செடிக்கு 100 காய்களும் 1 காயில் 7 உளுந்து விதைகளும் இருந்தன. ஒரு செடியிலிருந்து சுமார் 140 கிராம் விதைகள் கிடைத்தன. இந்த உளுந்தை இட்லிக்கு ஆட்டும் சமயம் 1 கிலோ அரிசிக்கு 150 கிராம் உளுந்தம்பருப்பு போதுமானது. மற்ற இரகமெனில் 200 கிராம் தேவைப்படும். இதில் இட்லி நன்கு பொங்கி மிருதுவாக இருந்தது.

ஆர். பெருமாள், த/பெ.ரெங்கராஜ்
1, ஆலங்குடி மெயின் ரோடு, குத்தாலம் தாலுகா
நாகை மாவட்டம் – 609801, செல் : 9486835547

**கோ பத்ம விரதம்**

ஆடி மாதத்தின் சுக்லபட்ச ஏகாதசி அன்று ஆரம்பித்து கார்த்திகை மாத சுக்லபட்ச துவாதசி வரை இந்த கோ பத்ம விரதத்தை அனுசரிக்க வேண்டும். பிரதி தினமும் மாட்டுத் தொழுவத்திலோ அல்லது பசுக்கள் நிறைந்திருக்கும் இடங்களிலோ கோமயத்தினால் சுத்தம் செய்து, பசுவின் படத்தை வரைந்து அதன் மீது 33 என்ற எண்ணிக்கையில் பூக்களைப் (கோலம்) போட்டு புஷ்பங்களால் அலங்கரிக்க வேண்டும். இதனை நான் ஒரு நாள் மட்டும் போட்டேன். போட்ட அன்று ஒரு பசுப்பண்ணையில் இருந்து மாடுகளுக்குத் தேவையான மசால் உருண்டை தயார் செய்து கொடுக்கும் ஆர்டர் வந்தது வியப்பை ஏற்படுத்தியது.



சகுந்தலா, சேவா, மதுரை.

**மண் குளியல்**

நமக்கு ஏற்படும் தலைவலி, உடல் உஷ்ணம் குறைய சுமார் 1/2 கிலோ மண் எடுத்து நீரில் கரைத்து பசையாக செய்து கொள்ள வேண்டும். இதனை தலை முதல் கால் வரை பூசி சுமார் 1/2 மணி வரை வெயிலில் இருக்க வேண்டும். மண் உலர்ந்த பின் நிழலில் 10 நிமிடங்கள் இருந்து பின்னர் குளிர்ந்த நீரில் குளிக்க வேண்டும். இதனை 2 நாட்கள் செய்து வரலாம்.
பெ. விவேகானந்தன், சேவா

## உலக அளவில் கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல்

**கல்வியாளர்கள், மாணவர்கள், சாமானிய மக்களின் கண்டுபிடிப்புகள்**

Honey Bee Network Creativity & Inclusive Innovation Awards (HBNCRIIA) 2020

தேனீ குழுமம் (நம் வழி வேளாண்மை குழுமம்), கியான் அமைப்பு மூலம் உலகில் பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள், நிபுணர்கள், பிற மக்கள் யாவரும் கலந்து கொள்ளும் கண்டுபிடிப்பு போட்டி 2020ல் நடைபெற்றது. இதில் 2500 கண்டுபிடிப்புகள் 87 நாடுகளிலிருந்து விவரம் பெறப்பட்டன. இந்த கண்டுபிடிப்புகளில் சிறந்த 10 கண்டுபிடிப்புகள், கொரோனா நோயிலிருந்து பாதுகாக்கும் 4 கண்டுபிடிப்புகள், 4 ஆறுதல் கண்டுபிடிப்புகள் தேர்வு செய்யப்பட்டன. தேர்வு குழுவில் பல நாடுகளை சேர்ந்த கல்லூரி பேராசிரியர்கள், நிபுணர்கள் உறுப்பினர்களாக இருந்தனர். இவ்வாறு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு 16.11.2021 அன்று இணைய வழியில் பரிசு கொடுப்பதாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த பரிசு விழாவிற்கு நித்தி அயோக் (NITI Ayog) உதவி தலைவர் ராஜீவ்குமார் சிறப்பு விருந்தினராக பங்கேற்பார். தேர்வு செய்யப்பட்ட சில கண்டுபிடிப்புகளின் சுருக்கமான விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**பெசோ மின்னஞ்சல்** (Peso Internet)



இந்த அமைப்பை பிலிப்பைன்ஸ் நாட்டில் கம்ப்யூட்டர் மெக்கானிக்குகள் இணைந்து உருவாக்கியுள்ளனர். பழைய கம்ப்யூட்டர் உதிரி பாகங்களைக் கொண்டு தயார் செய்யப்பட்ட மினி கம்ப்யூட்டர் ஆகும். இதில் ஒரு ரூபாய் நாணயம் உள்ளே செலுத்தினால் 5 நிமிடம் மின்னஞ்சல் சேவையை பயன்படுத்தலாம். அதாவது யு டியூப், பேஸ்புக் போன்ற சமூகவலைதளங்களைப் பார்க்கலாம். இதில் மானிட்டர், டைமர் போன்றவை அடங்கியுள்ளன. இது ஸ்மார்ட் போன் இல்லாதோர் அல்லது வசதியற்றோர் பயன்படுத்த ஏதுவாக இருக்கும்.

**பெண்கள் வன்முறையைத் தடுக்க**
**தெரு நாய்களுக்கு பயிற்சி**



தென்அமெரிக்காவில் ஈக்வடார் நாட்டில் ஆண்ட்ரூ என்ற பெண்மணியை (நரம்புத்தளர்ச்சியால் அவசியுறும் மாற்றுத்திறனாளி) ஒருவர் பின் தொடர்ந்து சென்று கீழே விழ வைத்து கொடுமை செய்ய முயன்றபோது தற்செயலாக நாய் ஒன்று பாய்ந்து வந்தது. இதற்கு பயந்து அந்த நபர் அந்த விடத்தை விட்டு ஓடிவிட்டார். நாயினால் காப்பற்றப்பட்ட அந்த பெண் தெரு நாய்களுக்கு பயிற்சி அளித்து தனியாக செல்லும் பெண்களை காக்கும் அமைப்பை உருவாக்கியுள்ளார்.

**பழங்களை பாதுகாப்பாக வைக்கும் தொறட்டி**
**(Fruit packing / wrapping pole)**



உயரமான மரங்களில் பழங்கள் முதிர்ந்து விழும் சமயம் பழுதாகி விடும். இதைத் தவிர்க்க பழுக்க கூடிய காய்களை பாதுகாப்பாக நிறுத்த (அதாவது மரத்தில் ஏறிச் செல்லாமலேயே) ஒரு எளிய அமைப்பை மலேசிய நாட்டைச் சார்ந்த அசார்பின் இஸ்மாயில் உருவாக்கியுள்ளார்.

**ஜூஸ் அருந்தும் தென்னைமர இலை உறிஞ்சுகுழல்**
(Straw using coconut leaves)

கர்நாடகா மாநிலத்தில் சஜிவர்கீஸ் என்பவர் பழச்சாறு அருந்த அல்லது இளநீர் அருந்த பசுமை உறிஞ்சுகுழல் தயாரிக்கும் இயந்திரத்தை உருவாக்கி உள்ளார். இதன் மூலம் பிளாஸ்டிக் ஸ்ட்ராவை தவிர்க்கலாம். இந்த உறிஞ்சு குழல் விட்டம் 3 மி.மீ லிருந்து 13 மி.மீ வரையும் தேவைக்கேற்ற நீளத்தில் செய்யலாம். இதில் தயாரிக்கும் உறிஞ்சுகுழல் ஒன்றின் விலை ரூ. 2.80– 4.70 வரை இருக்கும்.

**கேபிள் பள்ளி (Cable Classroom)**



கேபிள் நெட்வொர்க் மூலம் குஜராத்தில் சங்க்லேஸ்வர் வட்டாரத்தில் 70 கிராமங்களுக்கு இணையவழி தொடர்பு ஏற்படுத்தப்பட்டு இதனால் 20,000 பள்ளி மாணவர்களுக்கு ஆன்லைன் வகுப்புகள் நடத்தப்பட்டன. இதில் 350 ஆசிரியர்கள் வகுப்பு நடத்தினர் தினமும் 2 மணி நேரம் 2 மாதங்கள் இது நடைபெற்றது.

## கான்பெரன்ஸ் கால்ஸ் மூலம் வகுப்பு நடத்துதல்

(Teaching thorough Conference Call)



மஹாராஷ்ட்ரா மாநிலத்தில் சத்தார வட்டாரத்தில் ஒரு கான்பெரன்ஸ் கால் மூலம் 10 மாணவர்களுடன் தொடர்பு கொண்டு பேசமுடிந்தது. பள்ளி மாணவர்களுக்கு ஸ்மார்ட் போன் வசதியில்லை. சாதாரண கீ போர்டு மாடல் போன் தான் உள்ளது. பாலாஜி ஜாதவ் என்ற ஆசிரியர் மாணவர்களுக்கு போன் மூலம் கதையை சொல்லி பின்னர் மாணவர்கள் தாங்களே கதையை எழுதத்தூண்டுவார். 1 1/2 மாதத்தில் மாணவர்களுக்கு கேட்கும் திறன், எழுதும் திறன் கூடியுள்ளது. ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் 40 பேர் இந்த ஆன்லைன் வகுப்பில் உள்ளனர். இது வரை 500 கதைகள் வரை செல் மூலம் மாணவர்களுக்கு கூறியுள்ளார்.

தொகுப்பு : விவேகானந்தன், சேவா, மதுரை.

## மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்ற உடை அமைப்பு

(Adaptive Clothing for differently-abled people)



மேற்கு வங்க மாநிலத்தில் சௌமிதாபாசு என்பவர் ஒரு மாற்றுத்திறனாளி. இவர் மாற்றுத்திறனாளிகள் நீண்டகால நோயினால் அவதிப்படுபவர்கள், வயதானவர்கள் இவர்களுக்கு ஏற்றார்போல் ஆடை அமைப்புகளை உருவாக்கியுள்ளார். இது அணிவதற்கு எளிதாகவும் அதே சமயம் மேற்கண்டவர்களுக்கு குறிப்பாக குறைந்த நடமாட்டம் உள்ளவர்களுக்கு எளிதாக உள்ளது.

## தக்காளிப் பழங்களை அதிகநாட்கள் கெடாமல் சேமித்தல்

(Tomato shelflife enhancer)



ஆந்திர மாநிலத்தில் துபராஜ் என்பவர் தக்காளிப் பழங்களை 30 நாட்கள் வரை கெடாமல் இருப்பதற்கு மூலிகைக்கரைசல் தயார் செய்து பயன்படுத்தி உள்ளார். இதைத் தயாரிக்க 20 கிலோ செம்பருத்தி இலைகளை 10 லிட்டர் கொண்ட இரு பாத்திரங்களில் தனித்தனியாக வேக வைத்து பாதியாக வற்றவைத்து 5 ஸ்பூன் சிட்ரிக் அமிலம் சேர்த்துள்ளார். தனியாக ஒரு கிலோ சீயக்காய் காய்களை 3 லிட்டர் நீரில் கொதிக்க வைத்து பின்னர் சீனிவரைக்காய் பவுடர் ஒரு ஸ்பூன் சேர்த்து அல்லது சோடியம் கார்பாக்சிமீத்தைல் செல்லுலோஸ் சேர்த்து தயாரிக்க வேண்டும். மேற்கண்ட இரண்டையும் சேர்த்து தக்காளிப் பழங்களின் மேல் தெளிக்க வேண்டும்.

## மனிதர்களுக்கு பயன்படும் பாரம்பரிய மூலிகை வைத்யம்

நம்வழி வேளாண்மை இதழில் கடந்த பலவருடங்களாக தொகுத்து வந்த பாரம்பரிய வைத்யமுறைகளை சென்ற இதழின் தொடர்ச்சியாக கீழே கொடுத்துள்ளோம்.

**மூலம்**

1. எட்டி மர விதையை தேங்காய் எண்ணெயில் உரசி ஆசன வாய்க்கு வெளியே தடவ வேண்டும். அல்லது வேப்ப எண்ணெய் கொண்டு ஆசனவாயில் தடவலாம். அல்லது துத்தி இலையை வதக்கி ஆசனவாயில் வைத்து கட்டி விட்டால் 3 தினங்களில் சரியாகிவிடும்.

2. பாரிச வாயுவினால் வரும் மூலத்திற்கு நாய் கொட்டான் விதை 2 எடுத்து ஒரு லிட்டர் தண்ணீரில் வேக வைத்து 1/4 லிட்டராக வற்றவைத்து 3 வேளை சாப்பிட வேண்டும். இதனால் பாரிச வாயு குணமாகும்.

வைத்யர்: ஜமுனா, தெற்கு தெரு, டி. கிருஷ்ணாபுரம், பேரையூர் தாலுகா, மதுரை மாவட்டம்

3. மூலம் வந்தவர்களுக்கு கருணைக்கிழங்கு அவித்து உணவில் சேர்த்து கொள்ள வேண்டும். மலச்சிக்கல் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு பப்பாளிப்பழம், நிலவாகை சூரணம் (5 கிராம்) சாப்பிடத் தரவேண்டும்.

வைத்யர்: துரைப்பாண்டி, தெற்கு கல்லிடைக்குறிச்சி, அஞ்சல், அம்பாசமுத்திரம் தாலுகா, திருநெல்வேலி மாவட்டம்

4. பிரண்டைக்கொழுந்து இலை ஒரு கைப்பிடி அளவு எடுத்து பசுவின் நெய்யில் பக்குவமாக, அதாவது தழையில் உள்ள தண்ணீர் சுண்டும் வரை வதக்கி வயதிற்கேற்ப 5 உருண்டை (சுண்டைக்காய் அளவு) 1/2 லிட்டர் பசும்பாலில் தினமும் காலையில் வெறும் வயிற்றில் 3 நாட்கள் சாப்பிட வேண்டும். பின் 8 நாட்கள் இடைவேளை விட்டு மீண்டும் 3 நாட்கள் சாப்பிட வேண்டும். மீண்டும் 8 நாள் இடைவெளி விட்டு 3 நாட்கள் சாப்பிடவும். இதேபோல் 4 முறை (ஒரு மண்டலம் அதாவது 48 நாட்கள்) சாப்பிட்டால், ரத்த மூலம், சீல்மூலம், உள்மூலம், வெளிமூலம், சதைமூலம் போன்ற மூல நோய்களும் குணமாகும். பத்தியம் : கோழி, மீன், கருவாடு, டீ , காபி, போதைப் பொருட்கள், அகத்தி, கொய்யா, பொட்டுக்கடலை, நிலக்கடலை, நல்லெண்ணெய், போன்றவற்றை 6 மாதம் சாப்பிடக் கூடாது.

வைத்யர்: சி.மணிமேகலை, காட்டுப்பட்டி, விராலிமலை அஞ்சல், புதுக்கோட்டை மாவட்டம்

5. சோற்றுக் கற்றாழையின் 3 மடல்கள் சோற்றை மூலம் உள்ள ஆசனவாயில் வைத்து கட்டி விட்டால் 3 தினங்களில் சரியாகிவிடும்.

வைத்யர்: எம். மகாலிங்கம், தியாகராஜபுரம் , முதலிபட்டி அஞ்சல், விருதுநகர் மாவட்டம்

6. இரத்த மூலத்திற்கு : நாயுருவி இலையை சின்ன வெங்காயத்துடன் சேர்த்து விளக்கெண்ணெயுடன் வதக்கி காலை வெறும் வயிற்றில் சாப்பிட வேண்டும்.

வைத்யர் : திருமதி . விஜயலட்சுமி , கொடுமுடி, ஈரோடு மாவட்டம்

7. மூலம் / இடுப்பு வலிக்கு : பற்படகம் 50 கிராம், பரங்கி பட்டை 50 கிராம், ஜாதிக்காய் 50 கிராம், ஏலக்காய் 50 கிராம், கிராம்பு 50 கிராம், கசகசா 50 கிராம் ஆகியவற்றை கால் படி வெள்ளாட்டுப் பாலில் வேக வைத்து எடுத்து, நிழலில் உலர்த்தி, நெய்யில் வறுத்து, பனங்கற்கண்டு மற்றும் தேன் சேர்த்து லேகியம் போல் தயாரித்து தினமும் சாப்பிட வேண்டும். இந்த மருந்து சாப்பிட்ட பிறகு உடல் அதிக சூடாக இருக்கும். அதை குறைக்க பொன்னாங்கண்ணி, ஓரிதழ் தாமரை, வெள்ளை மிளகு, கஸ்தூரி மஞ்சள் ஆகியவற்றை நல்லெண்ணெயில் காய்ச்சி தினமும் தலைக்கு தேய்த்து வர வேண்டும்.

வைத்யர்: லெட்சுமி, வேலாயுத பாளையம், கரூர் மாவட்டம்.

**குழந்தையின்மை**

1. அருகம்புல் ஒரு கைப்பிடி, சீரகம் 20 கிராம், பூண்டு 50 கிராம். மேற்கண்ட அனைத்தும் சேர்த்து ஒரு லிட்டர் தண்ணீர் சேர்த்து ஒரு சாதி விறகு (ஒரே மர விறகு) வைத்து எரித்து 1 லிட்டர் தண்ணீரானது 1/2 லிட்டர் தண்ணீர் வரும் வரை சுண்ட வைக்கவும். பின்னர் வடிகட்டிய கரைசலை 50 மி.லி வீதம் காலை வேளையில் 3 நாட்களுக்கு வெறும் வயிற்றில் சாப்பிட வேண்டும். 3 நாட்கள் முடிந்த பின்னர் வேப்பம்பட்டை சாறு 25 மி.லி வீதம் 3 நாளைக்கு சாப்பிடவும். மருந்து சாப்பிடுவது வீட்டிற்கு தூரமான (மாதவிடாய்) சமயம் சாப்பிடவேண்டும்.

வைத்யர்: குருசாமி, ஒடப்பு தோட்டம், கோவிலூர், எண்ணமங்கலம் அஞ்சல், அந்தியூர் தாலுகா,

ஈரோடு மாவட்டம்.

2. நத்தைச்சூரி வேர் அல்லது ஆடு தின்னாப்பாலை அரைத்து கொட்டைப்பாக்கு அளவு உள்ளே 3 நாட்கள் சாப்பிட வேண்டும். மருந்து சாப்பிடுவது வீட்டிற்கு தூரமான (மாதவிடாய்) சமயம் சாப்பிடவேண்டும்.

3. நீர்முள்ளி இலை ஒரு கைப்பிடி அளவு, வெள்ளை தும்பை இலை 20, மிளகு 20 எண்ணம், ஒரு முழு வெள்ளைப் பூண்டு ஆகியவற்றை அரைத்து வீட்டுக்கு விலக்கான தினத்தன்று காலையில் வெறும் வயிற்றில் 3 நாட்கள் சாப்பிட வேண்டும். இந்நாட்களில் உப்பில்லா பத்தியம் இருக்க வேண்டும்.

வைத்யர்: எம். மகாலிங்கம், தியாகராஜபுரம், முதலிபட்டி அஞ்சல், விருதுநகர் மாவட்டம்

4. ஆண்கள் நித்தமும் பேரீச்சம் பழம் 2, ஒரு செவ்வாழைப்பழம் சேர்த்து சாப்பிட வேண்டும். பெண்கள் நித்தம் எள், கருஞ்சீரகம், கருப்பட்டி கலந்த உருண்டை தயார் செய்து சாப்பிடலாம். எள் 1 கிலோ எடுத்து இடித்து 300 கிராம் சீரகம், கருப்பட்டி பாலில் (1/2 கிலோவில்) கலந்து தயார் செய்து வைத்துக் கொள்ள வேண்டும். இதனை 48 நாட்கள் நித்தமும் இரு வேளை சாப்பிட வேண்டும். இது தவிர பெண்கள் நித்தமும் இரவு உணவாக அண்ணாசிப் பழமும், பப்பாளிப் பழமும் சாப்பிட்டு வரலாம். இந்த உணவு முறைகளை கடைப்பிடித்து ஒரு மாதம் உடல் உறவு கொள்ளாமல் இருந்து பின்னர் சரியான காலத்தில் உடல் உறவு கொள்ள வேண்டும்.

வைத்யர்: பத்மா, காந்திமியூசிய வளாகம், மதுரை

5. பெண்களின் மலட்டுத் தன்மை நீங்க:

சீரகம் 50 கிராம், சின்ன வெங்காயம் 100 கிராம், தென்னை மரப்பூ 50 கிராம் இவை மூன்றையும் சேர்த்து இடித்து, அதை ஒரு செவ்விளநீரில் ஒரு துவாரமிட்டு அதற்குள் போட வேண்டும். அதை இரவு முழுவதும் பனியில் வைத்து காலையில் குடிக்கவும். இவ்வாறு 3 நாட்கள் குடிக்க வேண்டும்.

வைத்யர்: இன்னாசிமுத்து, ஆர்.சி.கோவில் தெரு, சங்கரலிங்கபுரம் அஞ்சல், விளாத்திகுளம் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்

6. மாவிலங்கம்பட்டை 4, ஒரு மஞ்சள் கிழங்கு, பூடு 3, ஆகியவற்றை நீர்விடாது அரைத்து மாதவிடாய் ஆனபின் 3 நாட்களுக்கு ஒரு முறையாக மும்முறை கொடுத்து வர வேண்டும்.

வைத்யர்: காளிதாஸ் ஆசாரி, குமாரரெட்டியாபுரம், எப்போதும் வென்றான் வழி, தூத்துக்குடி மாவட்டம்

7.தைராய்டு கோளாறினால் மகப்பேறு இல்லாதவர்களுக்கு காலையில் வில்வஇலைச்சாறுடன் தேன், எலுமிச்சை சாறு கலந்து வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும். நண்பகலில் அதிக அளவில் கீரைகள், காய்கறிகள் உணவில் சேர்க்க வேண்டும். இரவு 7 மணிக்குள் பழங்கள் மட்டுமே உணவாக எடுத்துக் கொள்ள வேண்டும். இத்துடன் சிறப்பு பயிற்சியாக யோகாசனமும், பிராணயாமம் என்ற மூச்சுப் பயிற்சியும் காலை மாலை 2 வேளையும் தவறாது செய்ய வேண்டும். வாரத்திற்கு ஒரு நாள் அல்லது 15 நாட்களுக்கு 3 நாள் என உண்ணா நோன்பு இருப்பதுடன் பழச்சாறு அதிகம் குடிக்க வேண்டும். இந்த வைத்தியத்தின் மூலம் பலரும் மகப்பேறு அடைந்துள்ளார்கள்.

வைத்யர்: கே. பத்மாவதி, காந்தி மியூசியம், மதுரை

## ஆண்மை உண்டாக

1.சந்தனம், முருங்கைப்பட்டை, தேத்தான் பித்து, மற்றும் முற்றிய தேங்காய் பால் இவற்றை கலந்து இடித்து உட்கொள்ள வேண்டும்.

வைத்யர்: திரு.காளிதாஸ், ஆசாரி,

குமாரரெட்டியாபுரம் எப்போதும் வென்றான் வழி,

தூத்துக்குடி மாவட்டம்

2. தாதுவிருத்தி லேகியம் : பூனைக்காலிவிதை, நிலைப்பனைக்கிழங்கு, அமுக்கிராக்கிழங்கு சேர்த்து லேகியம் தயார் செய்து சாப்பிட்டு வர வேண்டும்.

வைத்யர்: துரைப்பாண்டி, தெற்கு கல்லிடைக்குறிச்சி அஞ்சல், அம்பாசமுத்திரம் தாலுகா, திருநெல்வேலி மாவட்டம்

## பெண்கள் மாதவிடாய் பிரச்சனைகள்

1. மாங்கொட்டையின் உள்ளே இருக்கும் பூச்சி தாக்காத நல்ல பருப்பை எடுத்து காய வைத்து இடித்து நன்றாகப் பொடி செய்து, ஒரு 100 கிராம் வருமாறு எடுத்து,

இதனுடன் சுத்தமான தேன் ஊற்றி குழைத்து ஒரு சுண்டைக்காய் அளவு எடுத்து 3 நாட்கள் காலையும், மாலையும் சாப்பிட்டு வந்தால் இரத்தம் அளவுக்கதிகமாக வெளியேறுவது குறைந்து விடும்.

2. மாதவிடாய், கருப்பையில் புண், கட்டி, அதி இரத்தப்போக்கு: மருதம்பட்டை, மாவிலங்கம்பட்டை, ஒரு கையளவு வெட்டி கஷாயம் செய்து அதில் சிறிதளவு சீரகத்தூள் சேர்த்து கொடுக்க வேண்டும். 2 வேளை காலை, மாலை 7 நாட்கள். மாதுளம்பழம், திராட்சைப்பழ ரசம் சாப்பிட வேண்டும்.

வைத்தியர் : செல்வி, சொர்ணக்காடு, பேராவூரணி, தஞ்சாவூர்.

3. பெண்கள் இடுப்பு வலிக்கு : துளசிவேர், முடக்கத்தான் வேர், நிலவாகை வேர், வேலிப்பருத்திவேர், ஆவாரை வேர் இலைகளிலுள்ள பட்டையெடுத்து தட்டி (நரம்பை விட்டுவிட வேண்டும்) புளி சேர்க்காமல், அரசிலசாமான் சேர்த்து குழம்பு வைத்து சோற்றில் போட்டு சாப்பிடலாம். வக்கனத்தி மரப்பட்டை எடுத்து நல்லெண்ணெயில் கொதிக்க வைத்து அதை இடுப்பில் தேய்த்து காலையில் குளிக்க வேண்டும்.

வைத்யர்: ஆறுமுகம் , பொன்னாகுளம், முத்துப்பட்டி, சிவகங்கை மாவட்டம்.

4. பெண்கள் தூரமான சமயம் வயிறு வலித்தால்: கொட்டித்தழை மரத்தின் தழையையும் விடத்தேரி தழையையும் சேர்த்து அரைத்து ஆட்டுப்பாலில் அல்லது பசும்பாலில் (50 மி.லி. அளவில்) கலந்து 2 அல்லது 3 வேளை சாப்பிடலாம்.

5. பெண்களின் உதிரப்போக்கிற்கு : வல்லாரை, ஆடாதொடை, பொன்னாங்கண்ணி சிறுகன்பீழை, நிலவேம்பு , சிறுகுறிஞ்சா இலைகள் கைப்பிடி அளவு இத்துடன் பூண்டு , மிளகு, சீரகம் , சுக்கு இவைகளை சிறிது சேர்த்து இடித்து பால் அல்லது நீராகாரத்தில் காலையில் வெறும் வயிற்றில் அருந்த வேண்டும். பத்தியம் இல்லை என்ற சொல்லிக் கொண்டே சாப்பிட வேண்டும்.

வைத்யர் : சின்னு, கார்வாடி, சின்னகோனார்பட்டி வழி, மணப்பாறை தாலுகா, திருச்சி மாவட்டம்

6. வெள்ளை போதலுக்கு: மாங்கொட்டை தூள் 1/4 கிலோ எடுத்து பனைவெல்லம் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும். இதனை காலை, மாலை 2 தடவை குணமாகும் வரை சாப்பிட வேண்டும்.

வைத்யர்: ஸ்ரீராமன், நல்லராலப்பள்ளி, அளேசீபம் அஞ்சல், ஒசூர் வட்டம், தருமபுரி மாவட்டம்

**முறையான மாத விடாய்க்கு :** எள்ளு 100 கிராம், கருஞ்சீரகம் 100 கிராம், பனங்கருப்பட்டி 100 கிராம் வாங்கி, கல், மண்நீக்கிய எள், கருஞ்சீரகம் இளம் வறுப்பாக வறுத்து எடுத்து கொண்டு, கருப்பட்டியை பால் காய்ச்சி பாகு பதம் வரும் போது எள், கருஞ்சீரகம் போட்டு கிளறி சிறு நெல்லிக்காய் அளவில் சூட்டுடன் உருண்டை செய்து காலை மாலை சாப்பிட்டு வர முறையான ஒழுங்காக மாதவிடாய் மாதாமாதம் ஏற்படும்.

வைத்யர்: ச.பன்னீர்செல்வம், பொன்நகர், தங்கம்மாள்புரம் அஞ்சல், கடமலைக்குண்டு வழி, தேனி மாவட்டம்.

2. யானை நெருஞ்சி இலையை ஓர் இரவு முழுவதும் ஒரு லிட்டர் தண்ணீரில் ஊற வைத்து அந்த நீரை காலையில் வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும். கருஞ்சீரகம், எள், கருப்பட்டி சேர்த்து இடித்து உருண்டை தயாரித்து வைத்துக் கொண்டு தொடர்ந்து 48 நாட்கள் சாப்பிட வேண்டும்.

**3.** மாங்கொட்டையின் உள்ளே இருக்கும் பூச்சி தாக்காத நல்ல பருப்பை எடுத்து காய வைத்து இடித்து நன்றாகப் பொடி செய்து, ஒரு 100 கிராம் வருமாறு எடுத்து, இதனுடன் சுத்தமான தேன் ஊற்றி குழைத்து ஒரு சுண்டைக்காய் அளவு எடுத்து 3 நாட்கள் காலையும் மாலையும் சாப்பிட்டு வந்தால் இரத்தம் அளவுக்கதிகமாக வெளியேறுவது குறைந்து விடும்.

வைத்யர்: சி. மணிமேகலை, ஐயப்பா தியேட்டர் அருகில் காட்டுப்பட்டி. விராலிமலை அஞ்சல், புதுக்கோட்டை மாவட்டம்.

**மஞ்சள் காமாலை**

**1.** மூலிகைப் பொங்கல் சாதம் செய்து சாப்பிட வேண்டும். பச்சரிசி 1 கிலோ, எருமைப்பால் 1 1/2 லி., வேலிப்பருத்தி 5 கிராம். இம்மூன்றையும் சேர்த்து பொங்கல் சாதமாக

தயார் செய்ய வேண்டும். 3 இட்லி அளவிலான பொங்கல் சாதத்தை (மருந்தை) ஒரு நபருக்கு ஒரு வேளை வீதம் 6 நபர்களுக்கு கொடுக்கலாம். சிறியவர்களானால் 2 இட்லி அளவிலான மருந்து கொடுக்கலாம். காலையில் வெறும் வயிற்றில் இம்மருந்தை சாப்பிட வேண்டும். சாப்பிட்ட 4 மணி நேரம் கழித்துதான் மற்ற உணவு உண்ண வேண்டும். முதல் நாள் மருந்து உண்ட பின் புழுங்கல் அரிசி கஞ்சி ஒரு நேரம் மட்டும் மற்றும் வெந்நீரும் அருந்த வேண்டும். 2ம் நாள் 3 நேரமும் கஞ்சி உண்ணலாம். பச்சைப்பயறு, மிளகாய் துவையல், காபி பால் அருந்தலாம். 3ம் நாள் காலை 7 மணிக்கு நல்லெண்ணெய், சீயக்காய் தேய்த்து குளிர்ந்த நீரில் குளிக்க வேண்டும். இவ்வாறு ஒரு நாள் விட்டு ஒரு நாள் 5 நாட்கள் குளிக்க வேண்டும். சேர்க்க வேண்டியன : ஆரஞ்சு, சாத்துக்குடி, கீரை வகைகள். தவிர்க்க வேண்டியன : மருந்து சாப்பிட்ட 10 நாட்கள் வரை புளி, மஞ்சள், திராட்சை, இளநீர், கீழாநெல்லி, மொந்தை வாழைப்பழம் சேர்க்க கூடாது. ஒரு மாதம் வரை கோழிக்கறி, முட்டை, கொமட்டிப்பழம், மதுபானம், புகையிலை சேர்க்கக்கூடாது. முகவரி : வீ.கிராணவள்ளி, தெற்கு பொய்கைநல்லூர், பறவை ரோடு, நாகப்பட்டிணம் மாவட்டம்

2. கீழாநெல்லி இலை 25 கிராம், மஞ்சள் கரிசலாங்கண்ணி 25 கிராம், முற்றிய வேப்பிலை 25 கிராம், மஞ்சள் தூள் 10 கிராம் ஆகியவற்றை புதிய மண் பானையில் போட்டு ஒரு லிட்டர் தண்ணீர் சேர்த்து முக்கால் லிட்டராக காய்ச்சி வடிகட்டிக் கொள்ள வேண்டும். தினமும் காலையில் கசாயத்தை சூடு செய்து ருசித்து அருந்த வேண்டும். அரை மணி நேரத்திற்கு பிறகு காலை உணவு உட்கொள்ளலாம். 7 மணி அளவில் மீண்டும் 75 மில்லி கசாயம் குடித்து வர வேண்டும். 5 தினங்களுக்கு ஒரு முறை புதிய கசாயம் தயாரிக்க வேண்டும்.

வைத்யர்: சீனிவாசன், சாண்டிநல்லா, நீலகிரி மாவட்டம்

3. பசு மாட்டு கோமியத்தில், கீழாநெல்லி 20 கிராம் அரைத்து காலை, மாலை 3 நாட்களுக்கு ஒரு செம்பளவு குடித்தால் உடனே குணமாகி விடும்.

4. மூக்கணசாரணத்தி வேர் 2, கிராம்பு 5 கிராம், பூண்டு 2 பல், மிளகு 5 கிராம், வசம்பு 5கிராம், சுக்கு 5கிராம் ஆகியவற்றை பொடி செய்து பசும்பால் 50 மிலி கலந்து 3 நாளுக்கு ஒரு வேளை வீதம் கொடுக்க வேண்டும்.

**இராஜம்மாளின் மஞ்சள்காமாலை வைத்தியம்:**

நோயின் அறிகுறி : கண்களின் வெண்படலம் மஞ்சள் நிறமாக இருப்பது நோயின் அறிகுறியாகும். நோய் முற்றிய நிலையில் கண்கள் மட்டுமல்லாது விரல் நகங்களும் மஞ்சள் நிறமாக காணப்படும். சிகிச்சை முறை : தும்பை இலையை அரைத்து நாட்களுக்கு 3 வேளை உச்சந்தலையில் பத்துப் போட வேண்டும்.

உணவு முறை : காலை எழுந்த உடன் நீராகாரத்தில் சிறிதளவு உப்பு கலந்து அரை லிட்டர் குடிக்க வேண்டும். காலைக் கடன் கழித்த பிறகு நீராகாரம் (தேவை யானால் மிகச் சிறிதளவு உப்பு கலந்து ) அரை லிட்டர் குடிக்க வேண்டும். 10 மணிக்கு கொதிக்க வைத்து ஆறிய நீரில் 50 கிராம் சிறிதளவு சீனியுடன் கலந்து குடிக்க வேண்டும். காலை 10.30 மணிக்கு அரை எலுமிச்சம் பழம் சாறு பிழிந்து நன்னாரி சர்பத் (சர்பத் தயார் செய்ய கொதித்து ஆறிய நீர் உபயோகப்படுத்த வேண்டும்.) கலந்து அரை லிட்டர் குடிக்க வேண்டும். மதிய உணவுக்கு முன் 3 முறை எலுமிச்சை சாறு குடிக்க வேண்டும். மதிய உணவிற்கு (மதியம் 1 மணி அளவில்) சாம்பார், தக்காளி ரசத்துடன் தேங்காய் துவையலுடன் மோர் சாதம் சாப்பிட வேண்டும். பெரும் பூசணி, சுரைக்காய், வாழைத்தண்டு மற்றும் சௌசௌ போன்ற காய்கறிகளை (எண்ணெய் சேர்த்து தாளிக்காமல்) மருந்து தேய்த்து 10 நாட்களுக்கு அதிகம் சாப்பிட வேண்டும். 10 நாட்களுக்குப் பிறகு பத்திய காலத்தில் ஆப்பிள், பழங்கள் அதிக அளவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

தவிர்க்க வேண்டியவை: கொய்யா, பலாப்பழம், பயறு வகைகள், கருவாடு, முட்டை, இறைச்சி வகைகள், மீன், எண்ணெய் பலகாரங்கள் மருந்து தேய்த்த 2

மாதங்களுக்கு சாப்பிடக் கூடாது. வைத்யர்: இராஜம்மாள், 3/49 அச்சம்பத்து, மதுரை

6. ஒரு வண்ணான் அவுரி செடி 50 கிராம் நீர் விடாமல் அரைத்து (2 பாகமாக பிரித்து ) பசுவின் பாலில் (250 மி.லி.) கலந்து இரு வேளை சாப்பிட வேண்டும். இதை அருந்திய உடன் சிறிதளவு வெல்லம் (கரும்பு வெல்லம்) சாப்பிடலாம். மருந்து சாப்பிட்ட 2 மணி நேரத்திற்கு பின் பால் அல்லது பால் சோறு (பாலில் நீர் சேர்த்து பச்சை அரிசி இட்டு கஞ்சியாய் காய்ச்ச வேண்டும்) மட்டும் அருந்தலாம். மருந்து சாப்பிட்ட மறுநாளிலிருந்து உப்பில்லாத உணவு ஒரு மாத காலம் வரை கடைபிடிக்க வேண்டும். பயன்படுத்தக் கூடாத பொருட்கள்: மீன், முட்டை, இறைச்சி (மூன்று மாதங்களுக்கு மட்டும்), புளி, ஐஸ் சர்பத், எலுமிச்சை, அதிக அளவு காரம், அதிக அளவு உப்பு, கிழங்கு வகைகள், பயறு வகைகள், எண்ணெய் பலகாரங்கள், நெய், பொரிகடலை, தேங்காய் மற்றும் தாளித்தல் கூடாது.

வைத்யர்: சு. கணேசன், வெள்ளாளர் நடுத்தெரு, வத்திராயிருப்பு, விருதுநகர் மாவட்டம்.

7. கீழாநெல்லி, விடத்தழை கொழுந்து, வண்ணான் அவுரி இலை ஒவ்வொன்றும் 20 கிராம் எடுத்து அரைத்து, பாலில் கலந்து வெறும் வயிற்றில் 5 நாட்கள் அல்லது குணமாகும் வரை 40 நாட்கள் குடிக்க வேண்டும். அசைவம் தவிர்க்க வேண்டும்.

சுரைக்காய் பச்சடி சாப்பிட உடல் குளிர்ச்சியாகி கண் மஞ்சள் நிறம் மாறும்.

வைத்யர் : மூக்கம்மாள், வெள்ளமலைப்பட்டி, உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.

### எலும்பு முறிவு

**1.** பசை கட்டு : முறிவு அடைந்த எலும்பை சரியாக எடுத்து வைத்து ஒரு நூல் துணியில் முட்டை வெள்ளை கரு மற்றும் மைதா கலந்த பசையை தடவி முறிவு அடைந்த இடத்தில் மேல் சுற்ற வேண்டும். முறிவின் தன்மை மோசமாக இருந்தால் தப்பை குச்சியை வைத்து கட்ட வேண்டும். பின்பு நல்லெண்ணெய் 10 மில்லியுடன் எலுமிச்சை பழச்சாறு 100 மில்லி சேர்த்து லேசாக சூடுபடுத்தி அந்த கட்டின் மேல் ஊற்றி வர வேண்டும்.

**2.** கைபிடி அளவு பேராமுட்டி இலை, சேமங்கிழங்கு, கந்தகம் சிறிது ஆகியவற்றை நல்லெண்ணெய் ஒரு லிட்டருடன் கலந்து நன்றாக காய்ச்சி 1/2 லிட்டராக வற்றியவுடன் துணியில் வடிகட்ட வேண்டும். எலும்பு முறிவு ஆன இடத்தில் துணியை சுற்றி கட்டி அதன் மேல் இந்த எண்ணெயை தினமும் ஊற்றவும்.

3. சவ்வு விலகுதல்/அடிபட்ட வீக்கம்: நெல் 100 கிராம், குறுமணல் 100 கிராம், மஞ்சள் தூள் 20 கிராம் சேர்த்து நன்றாக அரைத்து 250 மில்லி தண்ணீருடன் சேர்த்து கொதிக்க வைத்து காய்ச்சி ஆற வைத்து வீக்கத்தின் மேல் பத்து போட வேண்டும்.

உள் மருந்து : பேராமுட்டி இலையை பால் சேர்த்து அரைத்து பாலுடன் கலந்து குடிக்க வேண்டும். வைத்யர்: வெள்ளையம்மாள், க/பெ. பிச்சை, தோகூர் தெற்குத் தெரு , திருவையாறு தாலுகா, தஞ்சாவூர் மாவட்டம்

4. கோழி முட்டையின் வெள்ளைக் கருவுடன் உளுந்த மாவு சேர்த்து பசை போல் நன்றாக கலக்கி பருத்தி துணியில் கட்ட வேண்டும். கட்டுப் போட முடியாத இடத்தில் பசை தடவி பஞ்சு மேல் வைத்து துணி கொண்டு கட்ட வேண்டும். புண் உள்ள இடத்தில் நல்லெண்ணெய்யை துணியில் நனைத்துக் கட்ட வேண்டும்.

வைத்யர்: இராமசாமி , செட்டியபட்டி , பந்தல்குடி அஞ்சல், அருப்புக்கோட்டை தாலுகா, விருதுநகர் மாவட்டம்

5. திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை அருகே செம்பொன்விளை கிராமத்தில் வசித்து வரும் முத்துவேல் குடும்பம் மூன்று தலை முறையாக எலும்பு முறிவு வைத்தியத்தைச் செய்து வருகிறார்கள். தொலைதூரத்தில் இருந்து வருகின்றவர்களுக்கு இங்கே தங்கும் வசதி செய்து கொடுக்கப்படுகிறது.

எலும்பு முறிவுக்கு மருந்து செய்யும் முறை: நல்லெண்ணெய் – 1 லிட்டர், நன்னாரி – 1 லிட்டர், செஞ்சந்தனம், கோரைக்கிழங்கு, வேலிப்பருத்தி, தைவேளை, குறுந்தட்டி வேர், பூவரசம் பட்டை போன்றவற்றை சரியான அளவில் எடுத்து உரலில் இடிக்கவும். இடித்தவற்றை எண்ணெயுடன் கலந்து காய்ச்சவும். விறகு அடுப்பில் காய்ச்ச வேண்டும். அது பக்குவம் வந்ததும் இறக்கவும். சரியான பக்குவத்தில் எடுத்து கட்டின் மேல், காலை, மாலை, இரவு ஒரு சங்கு அளவு எடுத்து எலும்பு முறிவு உள்ள இடத்தில் தடவ வேண்டும்.

வைத்யர்: முத்துவேல், 4/56, தெற்குத்தெரு, செம்பொன்விளை, நவலடி அஞ்சல், திசையன்விளை (வழி), திருநெல்வேலி மாவட்டம்

**6.** கால் ஒடிந்தால்: ஒடிந்த எலும்பை ஆத்திநார் கொண்டு இழுத்து கட்டி விட்டு கோழி முட்டை 3

## அடிமட்ட கண்டுபிடிப்பாளர்கள் சங்கமம்
## நிகழ்ச்சி நிரல்

| நாள் | இடம் | நிகழ்ச்சி நிரல் | தொடர்பு முகவரி |
|---|---|---|---|
| 26-11-2021 & 27-11-2021 | சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையம், காமாட்சிபுரம், தேனி மாவட்டம். | காலை 10-00 மணி முதல் மாலை 5-00 மணி வரை | மகேஸ்வரன் 9677661410<br>ரம்யா 9578884432 |

### நம்வழி வேளாண்மைக்கு சந்தா விவரம் ;

| | வருட சந்தா ரூபாய் | ஆயுள் சந்தா ரூபாய் ; |
|---|---|---|
| நூலகங்கள் / நிறுவனங்கள் / கல்லூரிகள்/ கம்பெனிகள் | 200 | 2000 |
| விவசாயிகள் / தனிநபர்கள் | 150 | 1500 |
| தனிப்பிரதி | 30 | ---- |
| 15 வருட பிரதிகளின் தொகுப்பு (பைண்டிங் செய்தது ரூ. 1250) + ( கொரியர் செலவு ரூ. 250 ) | 1500 | ---- |

சந்தா தொகை மணியார்டர் அல்லது பாங்க் டிராப் மூலம் "சேவா" மதுரை என்ற பெயரில் எடுத்துக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

வங்கியின் பெயர் –யூனியன் பேங்க் ஆப் இந்தியா
மதுரை – கோச்சடை கிளை
SB A/C No – 493902010004241
IFSC Code : UBIN0549398

சேவா
45, டி.பி.எம் நகர், விராட்டிபத்து
மதுரை – 625016
தொலைபேசி : 0452-2380082 , 2380943

Printed by A. Palaniappan at
Vivekananda Press
G-4, Industrial Estate, Madurai - 7

நூல் அஞ்சல்

பெறுநர்

------------------------------------
------------------------------------
------------------------------------
------------------------------------

Published and Edited by
P. Vivekanandan on behalf of
SEVA
45. T.P.M. Nagar
Virattipathu
Madurai - 625 016
(0452) 2380 082, 2380943
Email : vivekseva@gmail.com
website : www.sevango.in